# தொண்டன்

பொங்கல் மலர்



1987 ★ ரூ. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்


தை — 1987

மலர்: 18 இதழ்: 12

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.
SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-


உள்ளே...


1. இதயத்திலிருந்து ... 1
2. இதுதான் பொங்கல் — 2
3. சர்வதேச கத்தோலிக்க ... 4
4. கவிஆரம் ... 6
5. இஸ்ராயேல் மக்களும் ... 8
6. இளைஞர் அரங்கம் ... 10
7. அமைதி பிறக்காதோ ... 13
8. சொந்தம் எப்போதும் ... 15
9. கத்தோலிக்க திருச்சபை ... 19
10. திருமறையைத் தெரிந்து ... 24
11. பொங்குமா பொங்கல் ... 27
12. குறுக்கெழுத்துப் போட்டி ... 29
13. உங்கள் பக்கம் ... 31


தொண்டன்
வாசகர்கள், எழுத்தாளர்கள், வர்த்தகர்கள்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்தால்
கடவுள் நம்முள் நிலைத்திருக்கிறார்.
1 அரு. 4/12

# இதயத்திலிருந்து...

புத்தாண்டு ஒன்று புலர்ந்துள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் ஏக்கங்களை, பெருமூச்சுக்களை, எதிர்பார்ப்புக்களைக் கொண்டதாகவே விளங்குகிறது.

எமது நாட்டுச் சூழ்நிலைகளைப் பொறுத்த அளவில் ஆண்டின் ஆரம்பமே அவநம்பிக்கையும், சலிப்பும் தருவதாகவே உள்ளது.

1986ம் ஆண்டு சமாதான ஆண்டாக அறிவிக்கப்பட்டது. ஆனால் சமாதானம்...? எத்தனை சண்டைகள், எத்தனை படுகொலைகள் இந்த ஆண்டை நிறைத்துக்கொண்டன! ஆயினும், ஆபிரிக்க மக்களின் பசியையும், பட்டினிச்சாவையும் கண்டு உலகமே துடித்து உதவ முன்வந்தபோது, மனித நெஞ்சத்தில் மனிதாபிமான உணர்வுகள் இன்னும் மடிந்துவிடவில்லை என்பதைக் கண்டோம். மனிதன் மனதுவைத்தால் இந்த உலகை சமாதானப் பூஞ்சோலையாக மாற்றியே விடலாம்.

இவ்வாண்டு சர்வதேச வீடமைப்பு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. மனித அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வீடு — அதுவும் இல்லாது வாழும் அவலம் களையப்படவேண்டியது அவசியம். அதேவேளை இத்தகைய அபிவிருத்தி முயற்சிகள் இன, மத, மொழி பேதங்களைக் கடந்து செயல்படுத்தப்படவேண்டும். ஒரு பக்கஞ்சார்ந்த வளர்ச்சியும், அபிவிருத்தியும் ஆக்கபூர்வமானதல்ல! இது அமைதியைக் குலைக்கும்; கட்டும் வீடுகளையே கல்லறைகளாக மாற்றும்.

ஒரு பக்கத்தில் வீடுகள் கட்டப்படுகின்றன; இன்னொரு பக்கத்தில் கட்டிய வீடுகள் திட்டமிட்டு உடைக்கப்படுகின்றன.

வீடு இல்லையே என்று ஏங்குவோர் ஒரு புறம்; பாடுபட்டு உழைத்துச் சேர்த்துக் கட்டிய வீடு தகர்ந்துவிட்டதே என்று தவிப்போர் மறுபுறம்

இந்நிலையில் சர்வதேச வீடமைப்பு ஆண்டு எதைச் சாதிக்கப்போகிறது என்பது சிந்தனைக்குரியது

அனைவருக்கும் அடிப்படை வசதிகள் கிடைக்கவேண்டும். கூடவே கிடைத்தவற்றை — காப்பாற்றி வாழும் உரிமையும், பாதுகாப்பும் அவசியம் கிடைக்கவேண்டும். கிடைக்குமா?

**சி. பி. இராஜேந்திரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சிறுகதை

# இதுதான் பொங்கல்

"இஞ்ச கேளு... சும்மா பயந்து சாகாத... இண்டைக்கும் சாவுதான்... நாளைக்கும் சாவுதான்... இப்படியே வீட்டுக்குள்ள கிடந்தா வயிறு நிரம்பப் போகுதா?... நாளைக்குப் பெரிசா பொங்கத்தான் வேணும்... இரண்டு பிள்ளைகளுக்கும் சப்பாடாவது கொடுக்கிற இல்லையா? எத்தன நாளைக்கு பாணத் தின்றது?''

"பாணத் திண்டாவது உசிரோட கிடப்பமே... கெடுவான்கள் எந்த நேரத்தில எங்க முளைப்பானுகள் எண்டு தெரியாது... என்னால உங்கள அனுப்பிப்போட்டு பயந்து சாக ஏலாப்பா'' மூக்கை இழுத்தாள் கனகம்.

"சொன்னாக் கேக்க வேணும். இப்பபோனா மத்தியானம் வந்திடலாம். ஒரு ஐம்பது பட்டாப் போதும்... நான் வித்துப்போட்டு வந்திடுவன்... இவன் மாதவன வரச் சொன்னன் நான் இன்னும் காணல்ல... எங்க இந்த இரண்டும்... ஒரு அசுப்பையும் காணால்ல''

"கந்தையாண்ணன்ட கடக்கி அனுப்பினான் வாழைப்பழமும், சீனியும் வாங்க... இருக்கிற அரிசியப்போட்டு பொங்குவம் எண்டுதான். தேங்கா மரத்தால விழுது தானே''

"உன்ன என்ன சொல்ற எண்டுதான் தெரியல்ல! எல்லாம் செய்யவும் வேணாம், தேவையானதச் செய்யவும் விடமாட்டாய்...''

"உங்களுக்கு நாளைக்கு என்னவும் எண்டா...'' அவள் குரல் தழுதழுத்தது.

"கனகம் அழப்படாது. இண்டைக்கு எவன்ட சீவியம் சொல்லிக்கடக்கெண்டு சொல்லு பாப்பம். அடுத்த வீட்டில இண்டைக்கு வாறது, நாளைக்கு நமக்கு... சாகிற எண்டா ஆத்துக்குப் போனாத் தானா சாவு... ஏன் டவுனுக்கு போகக்குள்ள நம்மடவனுகள் இரண்டு குண்ட எறிஞ்சானுகள் எண்டால், அவனுகள் ஊர் உலகத்தை நாசமாக்குவானுகளே...'' அவள் அழுகை அவனது நியாயத்தின் உண்மையை உணர்ந்து அடங்கியது.

"சரி...சரி... நான் வலையக் கொண்டுபோறன்... மாதவன் வந்தா சவளைக் கொண்டு வரச் சொல்லு... பகல் பொழுதுக்கு முதல் திரும்பிடுவன்'' சின்னவனின் தலைக்கறுப்பு மறைந்த கையோடு மாதவனும் கடப்படியில் நின்றான்.

"மாமி... மாமா இருக்காரா?... ஆத்துக்குப் போகக் கூப்பிட்டார்... ஏதும் பட்டால் பொங்கலுக்கு 'டொப்'பா இருக்கும்... மட்டறால் படுதாம்...'' அவன் முடிக்க முன்னமே வெளியே வந்த கனகம்

"டேய் பெத்தப்பா மாதிரி பேசிக்கொண்டு நில்லாம ஓடு... மாமா வலயக் கொண்டு போறார்... உன்ன சவளக் கொண்டுவரட்டாம்... போகக்குள்ள மணியும், சிவமும் கடைக்குப் போனவனுகள் கெதியா வரட்டாம் எண்டு சொல்லிட்டுப்போ... அங்க இஞ்ச புதினம் பாத்திட்டு நிப்பானுகள்... மத்தியானத்துக்குள்ள நீயும், மாமாவும் வரப் பாருங்க'' அவள் வார்த்தைகளை அவன் முழுதாகக் கேட்டானோ தெரியாது... ஆள் போய்விட்டான்...! மத்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

னத்துக்குள்ள வரப்பாருங்க என்று சொன்னபடி வந்தார்கள் - ஊரவர்கள்! அவர்களைப் பிணமாகத் தூக்கிக்கொண்டு. மாதவனும் சின்னவனும் பக்கத்தில் பக்கத்தில் கிடத்தப் பட்டார்கள். ஒருவனுக்கு நெஞ்சில் பாதியைக் காணேம், மற்றவனுக்கு தோள் பட்டையோடு கையைக் காணேம். ''டவுனில ஏதோ குண்டு வெடிப்பு. அரைக்கட்டைக்கு அங்கால மீன்பிடிச்ச இவன்களுக்கு கெலிகொப்டரில இருந்து சுட்டிருக்காங்க'' யாரோ ஒருவர் விளக்கம் தந்தார். அதை நிதானமாகக் கேட்கும் நிலையில கனகமில்லை. அவள் வாயில் வார்த்தைகள் பொங்கி வெடித்தன. நெஞ்சிலே சோகம் பொங்கி வெடித்தது. கண்ணில் கண்ணீர் பொங்கி வழிந்தது.

''கண் கெட்டவன்களிட நியாயத்தக் கேளு கடவுளே... எங்கேயோ நடந்ததுக்கு இந்த ரெண்டு சீவனும் என்ன செய்

**ஆனந்தா**

**A. G. இராஜேந்திரம்**

செய்தது... என்ட ராசாவக் கொண்டவன முருகன் கேப்பான்...'' உடல்மீது விழாதபடி தடுத்தவர்களை மீற சக்தியில்லாதவளாகக் குழந்தைகளை அணைத்து அளவிலா சோகத்துடன் புலம்பினுள், அழுதாள் பேதை...! பொங்கலுக்கு காசு கொண்டுவரப் போனுரே... இனி என்னத்தப் பொங்குவேன்...''

அதுதான் பொங்குறதே! துன்பமும், வேதனையும், கண்ணீரும் இங்கே பொங்கிப் பெருகவில்லை? இதுதான் இன்று தமிழினப் பொங்கல்! (முற்றும்)

# புதுக்கவிதைப் புயல்.....

பணத்தின் பாதிப்பு இன்று
புதுக்கவிதைகளை புதைகுழிக்குள்
தள்ளிவிட்டது
புதுக்கவிதைகளை நான் ரசித்ததுண்டு
இலக்கண வேலிகளைக் கடந்து
இதயத்தைத் தொடும் கருத்துக்கள் தரும்
கவிதைகள் என்னைப் பாதித்ததுண்டு
ஆனுல்,
இன்று, பல புரட்டிப்பார்க்க முடியாத
அருவருப்பைத் தருகின்றன
வாக்கியங்களை வார்த்தைகளாய் அடுக்கினுல்
கவிதை என்பது மரமாகி
இலக்கியம், கருத்து ஏதுமின்றி
காதறுந்த செருப்பாகக்
கவிதை இலக்கியம் தொங்குகிறது!

கவிதை எழுதுவதை - எழுதுவோரை
கண்ணியமாகக் கருதியநான்
இன்று வெட்கப்படுகிறேன்.

தரமான கவிதைகளை வடித்தாலும்
இன்றைய நெருக்கத்தில்
நான் தொலைந்துபோவேன்.

பணம் செய்துவிட்ட
இந்தப் படுபாதகச் செயலை எண்ணி
வேதனைப்படுகிறேன்.
கவிதை எழுத ஆரம்பித்தால்
என் பேனுவே இன்று மறுத்துவிடுகிறது!

- ராஞு

(இந்தியச் சஞ்சிகை ஒன்றில் வந்த இவ்விதயக் குமுறல் எமது நாட்டுக்கும் பொருந்துமா?)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் மகாநாடு பற்றிய அனுபவங்கள்.
# (14th Congress of ucip)

கலையுலகன் எஸ். லோகநாதன்

1986 ஒக்ரோபர் 21 முதல் 24 வரை புதுடெல்கியில் நடைபெற்ற சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் 14வது உலகக் காங்கிரஸில் கலந்து கொள்ளும் வாய்ப்பு தொண்டன் சஞ்சிகையின் ஆசிரியர் சார்பில் எமக்கு கிடைத்தது.

இலங்கையின் தமிழ் கத்தோலிக்க பத்திரிகை அமைப்புக் கிளையின் சார்பில், யாழ் மறைமாவட்டத்திலிருந்து அருட்திரு அன்ரன் மத்தாயஸ், அருட்திரு அருமைநாயகம் (ஆசிரியர் - புதிய உலகம், சத்திய வேத பாது காவலன்) ஆகியோருடன், நாம் கலந்து கொண்டோம்.

புதுடெல்கியில் நடைபெற்ற 14வது மகாநாட்டு நிகழ்ச்சிகளை இங்கு குறிப்பிடுவதற்கு முன் சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தைப் பற்றிய அறிமுகத்தை இங்கு தருவதற்கு விரும்புகின்றேன்.

## சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையம் (UCIP)
## International Catholic Union of Press

உலகம் முழுவதிலும் இயங்கும், உழைக்கும் கத்தோலிக்க பத்திரிகைத் துறையை ஒழுங்கமைக்கவும், ஆற்றுப் படுத்தவும், ஊக்குவிக்கவும், தொடர்புகளை ஏற்படுத்தவும் தோற்றுவிக்கப்பட்ட ஓர் சர்வதேச அமைப்பே இதுவாகும்.

1ம் உலக மகா யுத்தத்திற்கு பின்பே இதனை ஆரம்பிப்பதற்கான எண்ணங்கள் எழுச்சிபெற்றன. மக்களுக்கு சமாதானத்தை வழங்க - ஏற்படுத்த பத்திரிகைத் துறையின் பங்களிப்பை விரிவுபடுத்த மேலான ஓர் அமைப்பு இயங்குவது அவசியம் என உணரப்பட்டதனுல் 1926ல் பாரிசில் ஏற்படுத்தப்பட்ட ஓர் தீர்மானத்தை அடுத்து 1927 டிசெம்பர் 15ந் திகதியில் சர்வதேச கத்தோலிக்க பத்திரிகையாளர் சம்மேளனம் பெல்ஜியத்தில் உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகை ஆசிரியரான திரு ரெனிடெல் போர்ஜ் தெரிவு செய்யப்பட்டார்.

மீண்டும், உலகக் கத்தோலிக்க மேலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கத்தோலிக்க திருச்சபையின் அனுசரணையுடன் 1935ல் பிரான்சில் ஒன்று கூடி சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமைய (UCIP)த்தை உருவாக்கினர். இதுவே இவ்வமையத்தின் 1வது உலக மகாநாடுமாகும். இதனைத் தொடர்ந்த உலக மகாநாடுகள் வருமாறு.

1936 — ரோம் - இத்தாலி
1950 — ரோம் - இத்தாலி
1954 — பாரிஸ் - பிரான்ஸ்
1957 — வியன்ஞ - ஒஸ்ரியா
1960 — சந்தன்டர் - ஸ்பெயின்
1965 — நியுயோர்க் - அமெரிக்கா
1968 — பேர்லின் - ஜேர்மனி
1971 — லக்ஸ்சம்பேக்
1974 — ஆர்ஜென்டையின
1977 — வியன்ஞ - ஒஸ்ரியா
1980 — ரோம் - இத்தாலி
1983 — டப்ளின் - அயர்லன்ட்
1986 — புதுடெல்கி - இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவ்வுலக மகாநாடு ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை கூடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மகாநாடும் ஒவ்வொரு கருப் பொருளை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றன.

## 14வது மகாநாடு - புதுடெல்கி

சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின் 14வது மகாநாடு இந்தியாவில் நடைபெற்றது. இவ்வமையத்தின் வரலாற்றில் ஆசியக் கண்ட நாடொன்றில் முதன் முதலாக இடம் பெற்ற உலகக் காங்கிரஸாகும்.

இம் மகாநாட்டில் உலகின் 67க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 450க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஐரோப்பிய, ஆசியாக் கண்ட நாடுகளிலிருந்து அதிக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதிலும் சிறப்பாக 100க்கும் மேற்பட்ட இந்தியப் பிரதிநிதிகள் இடம் பிடித்திருந்தனர். அதேவேளை இலங்கையின் சிங்கள கத்தோலிக்க பத்திரிகை அமையத்திலிருந்து யாரும் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

மகாநாட்டுக்கு வருகைதந்த பிரதிநிதிகள் அனைவரும் புதுடெல்கி, பழைய டெல்கி நகரச் சுற்றுடல்களில் உள்ள பெரிய ஹோட்டல்களிலும், வை. எம். சி. ஏ. உல்லாச விடுதியிலும் தங்கியிருந்தனர்.

மகாநாட்டு நிகழ்வுகள் அனைத்தும் "விக்ஞான் பவான்" (Vigyan Bhavan) என்னும் மகாநாட்டுக் கட்டிடத்தில் இடம் பெற்றன. புது டெல்கியில் மாத்திரமின்றி இந்தியாவிலேயே இருக்கின்ற மகாநாட்டுக் கட்டிடங்களில் வசதி கூடிய ஒரு நிலையம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மகாநாட்டுக்குரிய வெளிநாட்டு, உள்நாட்டு பிரதிநிதிகள் அனைத்துப்பேரும் ஒக்ரோபர் 20ந் திகதியே புதுடெல்கி வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் தங்கியிருந்த இடங்களிலேயே மகாநாடு சம்மந்தமான பதிவு, ஏனைய தகவல்கள், கைநூல்கள் வழங்கல் ஆகியன இடம் பெற்றன. புதுடெல்கி, சர்வதேச, தேசிய விமானத் தளங்களிலும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பிரதிநிதிகள் வரவழைககப்பட்டனர் - வழி நடத்தப்பட்டனர்.

1986 ஒக்ரோபர் 21ந்திகதி செவ்வாய்க் கிழமை காலை 9-00 மணிமுதல் அனைத்துப் பிரதிநிதிகளும் மகாநாட்டு மண்டபம் நோக்கி விரைந்தார்கள்.

... ... ... தொடருவோம்

### வசதியான ஏழைகள்!

யார் யார் ஏழ்மையை விரும்புகின்றார்களோ அவர்கள் ஏழையாக இருப்பதிலும், பசியுற்றிருப்பதிலும், எளிய உடை அணிவதிலும், கடினமான படுக்கையில் படுப்பதிலும் மகிழ்வுறவேண்டும். ஏனெனில் ஒருவன் ஏழ்மையை விரும்பி வறுமையை வெறுத்தால், ஏழ்மையை வெகு தொலைவிலிருந்து பின்பற்றினால் அது வசதியான ஏழையாக இருப்பதல்லவா? அது நிச்சயமாக ஏழ்மையின் புகழைவிரும்புவதேயன்றி ஏழ்மையை விரும்புவதாகாது. அது செயலளவில் அல்ல, சொல்லளவில் மட்டும் ஏழ்மையை விரும்புவதாகும்.

— புனித இஞ்ஞாசியார் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வருவாய் புத்தாண்டே

பிறக்க வேண்டும் புத்தாண்டே
மறக்கப் பழைய வாழ்க்கையெலாம்
உறக்கமெல்லாம் இன்ரேடு
ஒழிந்து விழிக்க இவ்வாண்டில்
பறக்கப் பஞ்சம் இன்ரேடு
சிறக்க வளங்கள் செழிப்போடு
திறக்கவேண்டும் புதிய வழி
புகன்று வருவாய் புத்தாண்டே

**

பள்ளம் மேடு இல்லாத
பாதை யென்ருெரு சமத்துவமாய்
எல்லோர் வாழ்வும் பொதுவாக
ஏழ்மை யெல்லாம் ஒழிந்தாக
புல்லோர் புதிய உணர்வோடு
புகழும் நிலைமை உருவாக
எல்லாம் பெறவே எல்லோரும்
இன்றே வருக நீ புத்தாண்டே!

**

அவரவர் மொழியும் அவரேற்று
அவரவர் கலையும் அவர்கற்று
அவரவர் பெருமை நிலைத்தோங்க
அவரவர் உடைமை அவர்காக்க
அவரவர் கடமை அவர்செய்ய
அவரவர் தொழிலும் வளங்காண
அவரவர் பணியே மேலென்று
அவனியில் வருவாய் புத்தாண்டே!

- சிகண்டிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கட்டுவது எதை

வந்துவிட்ட புத்தாண்டே
வணக்கம் சொன்னேம்
சிந்துகின்ற புன்னகையால்
உறவைச் சொன்னேம்
எத்தனையோ ஏக்கங்கள்
எதிர்பார்ப்புக்கள்
புத்தகம்போல் நெஞ்சினுள்ளே
அடுக்கி இருக்கு
அத்தனையும் சொல்வதற்கு
காலம் இல்லை
அப்படியே சொல்ல இது
இடமும் இல்லை.

அமைதிக்கு ஓராண்டு
வந்து போச்சு
அமைதியைத் தேடிநெஞ்சு
களைத்தே போச்சு
கொண்டு வந்த அமைதியைநீ
எங்கே வைத்தாய்
கொண்டோடிச் சென்றுயோ
கொடுத்தால் என்ன ?

அவனியெலாம் அமைதிக்கு
ஏங்கும் போது
அவசரமாய் நீ சென்ற
மர்மம் என்ன ?
போய்விட்டாய், சரி புதிய
புத்தாண்டே நீ
எதைக்காட்டி ஏமாற்றிச்
செல்லவுள்ளாய் ?
காடுகளில் வாழ்ந்திருந்தோம்
கவலை யில்லை
காணி நிலம் வீடுவந்து
கவலை யாச்சு
கவலைகளை கரைத்துவிட
வருகின்றுயோ !

கல்லெடுத்து மண்ணெடுத்து
வருகின்றுயோ !
அமைதியின்றி நெஞ்செல்லாம்
அச்சத்தோடு
அவனியெலாம் உயிரொடுங்கி
வாழும் காலம்
போர்வெறியும், புகழ்வெறியும்
போதாதென்று
வேர்பாய்ந்து நிற்கின்ற
வறுமை பிணியும்
வாட்டுகின்ற பிளவுகளும்
பேதங்களும்
காட்டமாய் உலகையெலாம்
தாக்கும் போது
கட்டியொரு வீடு அதில்
களித்து வாழ
திட்டமிட யார் வருவார் ?
ஒன்று சொல்வேன்
வீடுகட்ட நாம் வாழா
விட்டாலும் நீ
கல்லறைகள் கட்டியேனும்
கழிந்து செல்வாய் !

வீடற்றோர் ஆண்டாக
விடிந்த ஆண்டே !
வீடுகட்டும் முன்னலே
நேயம் மிக்க
மனிதர்களை மண்ணகத்தில்
கட்டி எழுப்பு
மண் வாழும் மனிதர்களும்
மகிழ்ந்து வாழ்வர்.

✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இஸ்ராயேல் மக்களும் - இன்றைய நம் ஈழமக்களும்

அருட்செல்வி றுவீனா

மோயீசனையும் அவர் வழி நடத்திய இஸ்ராயேல் மக்களையும் பற்றிச் சிந்திக்கையில் நம்நாட்டு மக்களை எண்ணாமல் இருக்க இயலாது! எகிப்தில் குடியேறிய இஸ்ராயேல் மக்கள் கால ஓட்டத்தில் வலிமை படைத்தவர்களாய் அந்நாட்டை நிரப்பினர். (யாத் 1:1-7) அவ்வேளை ஆட்சிப் பொறுப்பேற்ற பாரவோன் இம்மக்களின் முன்னேற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கத் திட்டமிட்டு மூன்று வகையிலே அவர்களை துன்புறுத்தினான். (1) கட்டாயம் வேலை வாங்கிக் கட்டிடம் கட்டவைத்தான். (யாத்: 1: 8 - 12) (2) புதிதாக பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்ல ஆணை பிறப்பித்தான் (யாத்: 1: 15 - 22) (3) அடிமைவாழ்வின் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கினான் (யாத் 5: 6-23) இப்படிப்பட்ட காலத்திலே மோயீசன் தோன்றுகிறார். (யாத் 2: 1-3)

மோயீசனின் இளமைப் பருவ வாழ்வு நாமறிந்ததே. பாரவோன் மக்களால் வளர்க்கப்பட்டு அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கிய இளைஞனாக இருந்த போது அவரது வாழ்க்கையின் ஒரு திருப்பம் தோன்றியது. இஸ்ராயேல் ஆண்மகன் ஒருவனை ஓர் எகிப்தியன் அடிப்பதைக் கண்டு ஆத்திரப்பட்டு எகிப்தியனை வெட்டி வீழ்த்தியபின் பாரவோன் தன்னை தண்டிப்பான் என்று அஞ்சி மாதியான் நாட்டுப் பாலைவனப்பகுதிக்கு ஓடிவிடுகிறார். அங்கேயும் தான் அரமனையில் பெற்ற அறிவையும் ஆற்றலையும் வெளிக்காட்டாது சாதாரண மனிதனாக வாழ்கிறார். ஆண்டவனின் அழைப்பு அவருக்கு அருளப்படுகின்றது எரியும் முட்புதரில் தமது அழைப்பையும் பணியையும் ஆண்டவர் மோயீசனுக்கு அருளுகிறார். (யாத் 3: 3-10) அதோடு ''நாம் உம்மோடு இருப்போம்'' என்று வாக்குறுதி கூறுகிறார். இது வரை கடவுள் தன்னை விட்டுச் சற்றுத்தூரத்தில் இருப்பதாக மோயீசன் உணர்ந்திருக்கலாம். ஆனால் இப்போதோ அவர் தன்னுடன் இருப்பதை உணர்கிறார். அழைப்பைப் பெற்ற மோயீசனின் பணி எகிப்து நாட்டில் தொடர்கிறது. இஸ்ராயேல் மக்களின் விடுதலைக்காகப் பாரவோனிடம் சென்று இறைவனின் செய்தியை எடுத்துக் கூறிப் போராட்டம் நடத்துகிறார். இறைவன் பாரவோனின் மனதைக் கடினப்படுத்துகிறார் (யாத் 7:3) மோயீசன் செபிக்கும் மனிதன். எல்லாத் தேவைகளிலும் ஆண்டவரையே நாடுகிறார். ஆண்டவரோடு ஒன்றித்திருந்தார். பாரவோன் முன்னிலையில் அற்புதங்கள், அதிசயங்கள் மூலம் போராட்டம் நிகழ்த்துகிறார். போராட்டத்தின் விளைவு விடுதலை. பாலைவனத்தை நோக்கி விடுதலைப் பயணம் தொடர்கிறது. நாற்பது ஆண்டுகள் இஸ்ராயேல் மக்கள் பசியால் தவித்தார்கள் (யாத் 16:18) தாகத்தால் துவண்டார்கள் (யாத். 15: 22-25) பகைவர்களால் தாக்கப்பட்டார்கள். சுதந்தர நாட்டை நோக்கிச் சென்ற விடுதலைப் பயணத்தின் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் ஏராளம். அத்தோடு தம்மை நடத்திச் செல்லும் தலைவனின் நோக்கம் பற்றிய உணர்வு இல்லாமல் முணுமுணுப்புக்களாகின்றனர். சிறுபிள்ளைத்தனமாக இலட்சிய நோக்கின்றி உடனடித்தேவைகளைப் பற்றி மட்டுமே எண்ணுபவர்களாய் இருந்தார்கள். ஒரு வீட்டின், ஊரின், நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைவது அதனை வழி நடத்தும் தலைவர்கள் தாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மோயீசன் இஸ்ராயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டின் எல்லைவரை வழிநடத்திச் செல்கின்றார். அவர் வழியிலே அனுபவித்த துன்பங்கள் வேதனைகளுக்கு அளவேயில்லை. அவர் தன்னிலே ஏற்று புரிந்த தியாகங்கள் அளப்பரியன. இதுவே ஒரு உண்மையான தலைவனின் நிலை.

இன்றைய நம் ஈழமக்களைப் பொறுத்தவரையில் பொருளாதார சமூக ஏற்றத் தாழ்வுகள், சாதி, மதம், மொழி என்ற பாகுபாடுகள், ஒடுக்கு முறைகள், அநீதி மலிந்து சாக்கடையில் நெளியும் புழுக்களாய் லஞ்சம், ஊழல், கொலை, களவு, கற்பழிப்பு போன்ற செயல்களில் ஈடுபடும் காட்டுமிராண்டிகளாய் நாம் இருக்கின்றோம் என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டியுள்ளது. இவ்விதமான இக்கட்டான இச்சூழ்நிலையில் நீதிக்காக விடுதலைக்காகக் குரல் கொடுத்து உரிமைப்போரட்டம் நடத்தும் இளைஞர்கள் பயங்கரவாதிகள் என்ற பட்டப்பெயருடன் தினமும் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். (அன்று பால் மணம் மாறாப் பச்சிளம் ஆண்குழந்தைகள். இன்று வாலிபபருவம் அடைந்து வாழ்க்கையில் அடியெடுத்து வைத்து வாழ்வைச் சுவைக்க இருக்கும் இளைஞர்கள்) வாழத் துடிக்கும் உள்ளங்கள், சிறைக்கைதிகளாக இருப்போர் எத்தனை! எத்தனை!! படுகொலை செய்யப்படும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை என்ன? வீடுகளை இழந்து பசிதாகத்தோடு அகதிகள் முகாம்களில் அல்லலுறும் மக்களோ எண்ணிலடங்கா.


சமுதாய நீதிக்காக, விடுதலைக்காக உரிமை வாழ்வைக் கொடுப்பதற்காகத் துடிப்பவரும், இயக்கங்களில் ஈடுபட்டு உழைப்பவரும் பலர். ஆனால் சமுதாய நீதியை நிலைநாட்ட மனிதன் முயலலாம். ஆனால் நிலைநாட்டுபவரான கடவுள் செயல்படவில்லையெனின் மனித முயற்சி வீணே. மனிதன் இறைவனது திட்டத்திற்குத் துணைபுரியும் ஒரு கருவி மட்டுமே. மனிதன் அடிமைப்பட்டு அவதிப்படும் போது ஆண்டவர் அவனை மீட்க விடுவிக்க முன் வருகிறார். காரணம் அவர் ஒருவர் தான் விடுதலை வீரர். மோயீசன் விடுதலையளிக்க முன்வரவில்லை. மாறாக விடுதலையளிக்கும் கருவியாக இறைவனால் பயன்படுத்தப்படுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அநீதிக்கெதிராகக் குரல் கொடுத்த விடுதலைத் தலைவன் எம்பெருமான் யேசு. அன்பு, நீதி, உண்மை, அமைதி இவற்றை முழக்கமிட்டு, தீமைக்கெதிராகக் குரல் எழுப்பியமைக்கு அவருக்குக் கிடைத்த பரிசு சிலுவை மரணம், எனவே மக்களுக்குத் தொண்டாற்ற விரும்பும் நாம், உண்மைச் சுதந்திரம் பெற வேண்டுமென விழையும் நாம், மோயீசனைப் போல இறைப்பலத்தில் நம்பிக்கை கொண்டு மக்களுக்காக, மக்களில் ஒருவராக அவர்களோடு இருந்து துன்பத்தில் கலந்து பிறருக்காகச் செயல்பட முன்வருவோம். இன்னும் கிறிஸ்துவின் இறையரசின் மதிப்பீடுகளான அன்பு, நீதி, உண்மை, இரக்கம், அமைதி இவற்றை நிலைநாட்டி, தியாகம் கொண்ட, எதையும் தாங்கும் இதயமுடைய நல்ல தலைவர்கள் நம் நாட்டில் உதித்து வளர, உருவாக ஒத்துழைப்போமாக.

ஒருவன் அழும்போது அவனுக்கு முன்னே தாயாக வேண்டும். சிரிக்கும் போது நண்பனாக வேண்டும். சிந்திக்கும்போது அமைச்சனாக வேண்டும். குற்றம் செய்யும் போது அரசனாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் அரங்கம்



> 'நெஞ்சம் என்பது வீடானால் - அன்பு என்பது அதன் ஜன்னலாகும்'

## சர்வதேச வீடுகள் வழங்கும் ஆண்டு - 1987

ஐ. நா. தாபனம் 1987ஆம் ஆண்டை சர்வதேச வீடுகள் வழங்கும் ஆண்டாகப் பிரகடணப் படுத்தியுள்ளது, இலங்கையின், கௌரவ பிரதம மந்திரி சில வருடங்களுக்கு முன் ஐ. நா. சபையில் முன்வைத்த எண்ணம் இவ்வாண்டில் உலகம் முழுவதிலும் நிறைவேறுகிறது.

இலங்கையில் 1977க்குப்பின் ''மாதிரிக் கிராமியத் திட்டங்கள்'' மூலம் பல பாகங்களிலும் வீடமைப்பு-வழங்கல் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

- ★ முதலாவது மாதிரிக்கிராமம் - உதாகம
- ★ நூறாவது மாதிரிக்கிராமம் - சியோதாகம
- ★ இருநூறாவது மாதிரிக் கிராமம் - தெசியகம
- ★ முன்னூறாவது மாதிரிக்கிராமம் - துன்சியகம
- ★ நானூறாவது மாதிரிக்கிராமம் - ஹாரசியகம

மேற்குறிப்பிட்ட மாதிரிக் கிராமங்கள் அனைத்தும் 'யாப்பகூவ' தொகுதியிலேயே அமைந்துள்ளன. 500வது மாதிரிக் கிராமமும் – பன்சியகம 1987 ஜனவரியில் அதே யாப்பகூவத் தொகுதியிலே உள்ள ஓர் கிராமத்தில் திறந்து வைக்கப்படவுள்ளன.

ஏன் இத்தொகுதி இத்தகைய சிறப்புக்களைப் பெறுகின்றது என்பது ஓர் அரசியல் ஆய்வாயினும், வீடுகள் வழங்கும் ஆண்டிலாவது இலங்கையின் ஏனைய பிரதேசங்களும் வீடமைப்புத் திட்டங்களைப் பெற வேண்டுமென விரும்புகின்றோம்.

குறிப்பாக, இந்த சர்வதேச வீடுகள் வழங்கும் ஆண்டிலாவது, வட-கிழக்கு மாகாணங்களில், வீடுகள் புதிதாக கட்டி வழங்கப்படாவிட்டாலும், மக்கள் இருக்கும் அவர்களுக்கு ஆதாரமாகயிருக்கும்.

- ★ வீடுகள்
- ★ பாடசாலைகள்
- ★ வைத்தியசாலைகள்
- ★ ஆலயங்கள்

ஆகியன உடைக்கப்படாமல் இருக்க உரியவர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென அரங்கின் சார்பில் கேட்பது -

**கலையுலகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணிப்பார்க்கையில்...

## கவலை

ஆண்டவன் தான் சொல்லட்டுமே
ஆயிரந்தான் ஆகட்டுமே
கவலைப்படாத மனந்தான் இருக்கிறதா?
கவலைப்பட்டுப் பயனில்லை என்று
தெளிவாகத் தெரிந்திருந்தாலும்
மனம் - அது கவலைப்படாமல் இருந்ததில்லை
யேசுவின் வல்லமைகளைக் கண்டிருந்தும்
அவருக் கருகில் இருந்தவர்களும்
கவலைப்பட்டார்களே!
"இவர்கள் உணவுக்கு என்ன செய்வார்கள்?
வீட்டிற்கு அனுப்பிவிடும்"
கவலையில் முடிவு பிறக்கிறது
ஆனாலும், அது முடிவாகவில்லை;
"அவர்களே மிகவும் பசியோடிருக்கிறார்கள்;
நீங்களே உணவு கொடுங்கள்"
அவர் கவலைப்படவில்லை; மாறாக,
அவர்களைச் சிந்தையில் கொண்டிருந்தார்.
அதனால் அவர் முடிவு எடுத்தார்;
அதில் முடிவும் கண்டார்.
நடந்த ஒன்றையோ, எதையோ இட்டு
கவலையுற்று ஆவதேதுமில்லை
அதையிட்டுச் செயல்பட ஏதுமில்லை
கவலையில் உருவான முடிவு பூரணமாயிராது
மனந்தான் குழம்பிக் கிடக்கிறதே,
மாறாக,
ஒன்றைச் சிந்தையில் இருத்தி
அதற்காக ஒரு முடிவெடுத்தால்
அது செயலாகக் கூடிய சாத்தியம் உண்டு,
சிந்தை குழம்புகிறதா?
ஆறுதலாக எண்ணிப்பார்க்கையில்
யேசுவின் சம்பவம் ஒன்றே போதும்
இதை விளக்கிச் சொல்ல
யேசுவின் சீடர்கள்
மக்களையிட்டுக் கவலைப்பட்டார்கள்.
கவலை - சிந்தையில் கொண்டு அல்லல்படுவது
எப்படிச் சாப்பிடச் செய்வது? சாப்பாடு
நம் வசமில்லையே?
நேரம் போகிறதே: காசு இல்லையே:
வெகுதூரம் போக
வேண்டுமே?
இத்தகைய கவலை ஒன்றும் செயலாக முடியாது
சாப்பிடச் செய்ய முடியாது, சாப்பாடு இராது
நேரம் போகும்; காசு கிடையாது. எங்கும்
போகப் போவதில்லை.
அவர்கள் மட்டில் அப்படித்தானே நடந்ததா?

இயேசு,
அவர் அவர்களைச் சிந்தையில் வைத்திருந்தார்
அதையிட்டு அலட்டிக் கொள்ளவில்லை.
அவர்கள் அனுதரவாய்த் தோன்றினார்கள்
உண்ணக் கொடுப்போம் என்று
ஒரு முடிவெடுத்தார்,
அதுதானே நடந்தது.
ஆம், ஒன்றையிட்டு நாம்
நமது சிந்தையில் கவனத்திற்கெடுத்தல்
அவசியமானது, அதில் நமக்குரிய
பங்கைத் தீர்மானித்து, ஏற்ப
நிறைவேற்றிவிட வேண்டும்.
மாறாக நாம்தான் எல்லாம்
என்ற வகையில் வீணே அல்லல்படக் கூடாது.
பரீட்சையில் சித்தியடைய வேண்டிய
மாணவன்
சிந்தையில் கொள்ள வேண்டியது
பரீட்சையில் சித்தியைத்தான்.
அதற்கேற்ப எடுக்கக்கூடிய முடிவு
நன்கு படிப்பதுதான்.
இதைவிட்டு பரீட்சையில் சித்தியடைய
வேண்டுமே
தோற்றால் என்னவது? எப்படிப் பிறர் முகம்
பார்ப்பது எண்ணெண்ணி
அல்லல்பட்டு ஆவதென்ன?
என்னத்தைப்படிப்பது என்று கவலைப்படும்
நேரத்தில் எதையாவது படித்துத்
தொலைக்கவேண்டும், பரீட்சையில்
படித்தது பலனளிக்கும்,
கவலை என்றால் என்ன தனித்ததா?
ஒன்று மாறி ஒன்றாக,
தொடர்ந்தேர்ச்சியான
சங்கிலிக் கோர்வையல்லவா அவை?
அல்லல்பட்டு அலட்டிக் கொள்வதால்,
சிக்கலைப் பிரிக்கப்போய்
அதிலே சிக்கி, மூச்சுத் தடுமாறி
சாகும் நிலைதான் முடிவில்
எனவே, கிறிஸ்துவின் வார்த்தையில்
முழு நம்பிக்கை வைத்து,
வீணே கவலைப்படாமல்,
நடப்பதைக் கண்டு,
சிந்தையில் கொண்டு
வாழ்வதே நமக்கு நல்லது.

**ஆனந்தா A. G. இராஜேந்திரம்**
புளியடிக்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திரி.-மட். இளைஞர் ஆணைக்குழுவின்
# 1986ம் ஆண்டிற்கான நிகழ்வுகள்

நாட்டின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் மத்தியிலும் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு தமது தலைமைத்துவ - உருவாக்கப் பணிகளை 1986லும் கூடுமானவரை நடத்தியது என்பது பாராட்டுக்குரியதாகும்.

இந்த நிகழ்ச்சிகளில், குறிப்பாக 9க்கும்மேற்பட்ட தலைமைத்துவப் பாசறைகளை நடத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

| நிகழ்வுகள் | பங்குபற்றியோர் |
|---|---|
| தை-26 கல்முனைப் பங்கு — 1 நாள் கருத்தரங்கு | 55 |
| மாசி-22 - 24 சர்வோதய ஆசிரியத் தொண்டர்கள் (பாசறை சர்வோதயம்) | 54 |
| பங்குனி-8 - 9 'அருணோதயம்' — வீச்சுக்கல்முனை (பாசறை மன்ரேசா) | 14 |
| பங்குனி-14 சர்வமத இளைஞர் அமைப்பு (மாணவர் ஒருநாள் நிகழ்வு) | 64 |
| பங்குனி-15 அலிகார் ம. வி. ஏறாவூர் (1 நாள் கருத்தரங்கு) | 45 |
| பங்குனி-21, 25 கல்முனை வட்டாரப் பாடசாலை மாணவ முதல்வர்களுக்கான நிகழ்வு (பாசறை மன்ரேசா) | 30 |
| சித்திரை-24 - 27 சர்வமத இளைஞர் அமைப்பு (பாசரை மன்ரேசா) | 18 |
| ஆனி-25 - 28 கல்குடா கல்விக்கோட்ட மாணவ முதல்வருக்கான நிகழ்வு (பாசறை மன்ரேசா) | 38 |
| ஆவணி-2 மட்/பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களுக்கான 1 நாள் நிகழ்வு | 72 |
| ஆவணி 8 - 11 புளியடிக்குடாப் பங்குப் பாசறை (பாசறை மன்ரேசா) | 30 |
| ஆவணி-15 - 19 வெருடாந்த மறைமாநில இளைஞர் பாசறை (மன்ரேசா) | 30 |
| புரட்டாதி-5-7 தேற்றாத்தீவு பங்கு இளைஞர் நிகழ்வு (பாசறை தேற்றாத்தீவு) | 35 |
| புரட்டாதி-13 தாழங்குடா இளைஞர் 1 நாள் நிகழ்ச்சி | 61 |
| ஐப்பசி-16-20 மெதடிஸ்த இளைஞர் பாசறை (பாசறை மன்ரேசா) | 30 |
| ஐப்பசி-25-27 குழு வாழ்வு சகோதரிகளுக்கான நிகழ்வு (பாசறை மன்ரேசா) | 30 |
| மார்கழி-28-31 மட்டுநகர் மாணவர் நலன்புரிச் சங்க நிகழ்ச்சி (பாசறை மன்ரேசா — திட்டமிடப்பட்டுள்ளது) | 30 |

இவற்றைவிட திட்டமிடப்பட்ட சில நிகழ்ச்சிகள் நாட்டின் சூழ்நிலை காரணமாக இரத்துச் செய்யப்பட்டன — அல்லது பிற்போடப்பட்டுள்ளன இருப்பினும் மேல் வந்த நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் ஒத்துழைத்தவர்கள் அனைவருக்கும் திரி/மட். இளைஞர் ஆணைக் குழுவின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

**சி. மெக்ஸி ஒக்கர்ஸ்**
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்.

உங்களது ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

**இளைஞர் அரங்கம்**
திரி./மட். இளைஞர் ஆணைக்குழு
20, மத்திய வீதி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# அமைதி பிறக்காதோ

குரூஸ் அன்ரனி
இத்தாலி.

வெற்றி எப்பக்கம் என்ற நிலையில் உலகெங்கும் பரவலாக போர்க்கோலம் ஒரு புறம். அமைதி - சமாதானம் வேண்டும் என்ற குறிக்கோளில் பேச்சுவார்த்தை, மகா நாடுகள், செபக் குழுக்கள் மறுபுறம் எதிர்காலம் எப்படியோ என்ற அங்கலாய்ப்பில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், கூட்டம், வன்முறை என பல்வேறு வழிகளில் போராடுகின்றனர். இவைகளின் மத்தியில் பெரும்பான்மையினர் (ஏழைகள், வறியவர்கள்) உயிர் இழந்து, அங்கங்கள் இழந்து, உறவுகளை இழந்து தவிக்கும் நிலை ஒருபுறம் இது இன்று நாம் காணும் அனுபவ உண்மைகள்.

இன்று போரினாலும், வறுமையினாலும், காலத்தின் சூழ்நிலைகளாலும் அனாதையானவர்கள் — அனாதையாக்கப்பட்டவர்கள், குறிப்பாக இளைஞர்கள், பிள்ளைகள் செய்வது அறியாது, செல்லும் பாதை புரியாது தத்தளிக்கின்றனர். இந்த வேளையில் உற்சாகம் தரக்கூடிய ஓர் உண்மையை பகிர்ந்துகொள்வதில் மகிழ்கின்றேன்.

மனிதரை இறை குடும்பத்தில் ஒன்றிணைக்க இவ்வுலகில் பிறந்த யேசு பெருமானின் விருப்பப்படி வாழ்ந்து, அவருக்காகவே உயிர் துறந்த எண்ணற்ற மனிதரை இறைவன் தன்னோடு இணைத்ததுமன்றி, திருச்சபை வழியாக



அவர்களில் சிலரை மகிமைப்படுத்தி உலகினருக்கு முன்மாதிரியாகவும், துணையாகவும் இறைவனின் சமூகத்தில் பரிந்து பேசுபவர்களாகவும் நியமித்துள்ளார்.

இளைஞர், உலகத்தின் - ஏன், பரிசுத்த தந்தை கூறுவதுபோல் திருச்சபையின் எதிர்கால சாட்சிகள், காப்புகள், தலைவர்கள், வழிகாட்டிகள், தூண்கள். இவ்விளைஞர்களில் அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், வழிதவறியவர்கள் ஏராளம். இவர்கள் மேல் அன்பு கொண்டு இவர்களை பாதுகாத்து, வழிநடத்தி, காப்பாற்ற தன்னை அர்ப்பணித்தவர் புனித ஜெரோம் எமிலியானி. இவர் ஒரு பொது நிலையினர். 1928ல் பரிசுத்த தந்தை 11ஆம் பியோ வால் கைவிடப்பட்ட இளைஞர்களின் பாதுகாவலர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டார் இவரின் பாதையிலே பணியைத் தொடர்கின்றனர், இவரைப் பின்பற்றிய குழுவினர் 'ஏழைகளின் ஊழியர்கள்' என்று அழைக்கப்பட்ட இச்சபையினர் 'சொமாஸ்கன் ஊழியர்கள்' என இன்று அழைக்கப்படுகின்றனர்.

### வன்முறையின் பிறப்பிடம்

அமைதிப் புரட்சிகளை நடைபெறவிடாது தடுப்பவர்கள் ஆவேசப் புரட்சிகளை விதைக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1486ல் பிறந்த புனித ஜெரோம் எமிலி யானி இளைஞனபின் போர் வீரராகி, போரில் சிறைபிடிக்கப்பட்டார். தேவ அன்னை யின் அற்புதமான பிரசன்னத்தால் 1511ல் சிறையிலிருந்து விடுபட்டார். இந்நிகழ்ச்சியே இவரது மனமாற்றத்துக்குக் காரணமாயிற்று. 1537ஆம் ஆண்டு மாசி மாதம் 8ம் நாள் சொமாஸ்காவில் இறந்தார். 1767ல் புனித ராகப் பிரகடனப்படுத்தப்பட்டு 1928 ல் கைவிடப்பட்ட இளைஞர்களின் பாதுகாவலர் என அறிவிக்கப்பட்டார். கடந்த ஆண்டு அவ ரது பிறப்பின் 500வது ஆண்டு விழாவை திருச்சபை கொண்டாடியது. இவர் வழி கிறீஸ்து உலகில் ஒளிர்ந்தது போன்று, ஒவ் வொரு கிறீஸ்தவரும் கிறீஸ்துவின் சாட்சி களாக உலகில் ஒளிரவேண்டும்.

இவரது திருநாள் திருச்சபையின் நாட் காட்டிப்படி மாசித்திங்கள் 8ம் நாளாகும்.

இப்புனிதரின் 5வது நூற்றாண்டை முன் னிட்டு திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் வரைந்த மடலில் "பொது நிலையினருக்கு முன்மாதிரியாக அன்பைதாங்கி வழிநடந்த இப்புனிதர் திருச்சபையில் உள்ள பொது நிலையினர் அனைவரும் கிறீஸ்துவ விசுவாசத்தில் ஊன்றி, அன்பைத் தாங்கி கிறீஸ்துவுக்குச் சான்று பகர புனித ஜெரோம் எமிலியானியே இறைவனைப் பார்த்து மன் றுடும்" என்று முடித்துள்ளார்.

இப்புனிதரைப் பற்றி - அவரைத் தொட ரும் பணியாளர் பற்றி அறிய விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**CROOS ANTONY**

NOVIZIATO PADRISOMASCHI
SOMASCA DI VERCURAGO (BG)
ITALY.

## முகமும் காலும்

என்னைவிட என் நண்பன் நிறத் தில் கறுப்பு. நான் அவனை அதற் காகக் கேலி செய்வதுண்டு. ஒரு நாள் எனக்கு அவன் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது நல்லதொரு பாடம் புகட்டிவிட் டான். நீருக்குள் நின்றபோது பாதத் தைத் தூக்கிக்காட்டி பார் இதோ உன் வெள்ளை முகத்தை விட என் பாதம் வெள்ளையாயிருக்கிறது எனக்குப் பாதத்திலிருக்கும் வெண் மை உனக்கு முகத்திலிருக்கிறது. அவ்வளவு தான் என்றான். அன்றி லிருந்து அவனைக் கேலி செய்வதை விட்டு விட்டேன்.

நம் அழகு நமக்கு பெருமி தத்தைக் கொடுக்கலாம். ஆனால் அகந்தையை தரக்கூடாது. அதனால் நாம் நம்மைப் போற்றி அழகில் குறைந்தவர்களைத் தூற்றக்கூடாது நமது வெண்மை நிறம் கரிய நிறம் கொண்டவர்களைத் தூற்றுவதற் காகத் தரப்படவில்லை கருமையிலும் அழகிருக்கிறது என்பதை மறக்கக் கூடாது. கண்ணனும் காமனும் கருமை நிறம் கொண்டவர் தானே. எனவே அழகற்றவர்களைப் பழிக் கக் கூடாது அங்கயீனர்களைப் பழிக்கவே கூடாது. அவர்கள் மீது பரிதாபப்பட வேண்டும்.

—சேவியர் ஜோதி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செ.குணரெத்தினம்

## அத்தியாயம் 12

" பூட்டுடைக்கும் பேர்களுக்கு
பூரிக்கும் சலுகைகளாம்
நாட்டுக்கு உழைப்பவர்க்கோ
நாளெல்லாம் கதவடைப்பு "

-- மலைத்தம்பி

சின்னவனின் மாமன் கதிராமன் அசடுவழியச் சிரித்தபடி நீண்ட நேரமாக ஆனந்தனையும் பாக்கியத்தையும் மாறி மாறிப் பார்த்தபடியிருந்தான்.

"என்ன கதிராமன் அப்பிடிப்பாக்கிரு! உன்ர மகளை இவன் சின்னவனுக்குக் கட்டிக்குடுக்க விருப்பம்தானே!" என்று பாக்கியம் கேட்டதும், கதிராமர் சிரிப்பை நிறுத்திக் கொண்டு, "இதென்ன பாக்கியம் உன்ரகத என்ர மருமகன் சின்னவனுக்காகத்தானே என்ர பிள்ளைய இவ்வளவு காலத்துக்கும் மானம் மரியாதையோட வளத்து பத்திரமா வெச்சிருக்கிறன்!" என்ருன். "என்ன சீதனம் குடுப்பா" பாக்கியமே அடுத்த கேள்வியையும் போட்டாள். 'சீதனம்' என்றதும் கதிராமன் ஆனந்தனை மெல்லப் பார்த்தான் அவனையுமறியாமல் ஒரு சங்கீதச் சிரிப்பு எழுந்தது

"நானென்ன உங்களப்போல கையில மடியில நிறையக் கட்டி வெச்சிருக்கிறனு? ஒரு அஞ்சப் பத்த நானும் என்ற புள்ளட பேரில வங்கியில போட்டு வைக்கலாமெண்டு மாதாமாதம் கிழமைக்குக்கிழம விக்கிற சுவீப் ரிக்கெட்டெல்லாம் எடுத்துத்தான் பாக்கிறன். நம்மட தரித்திரம் நம்மவிட்டபாடில்ல. நான் இந்த ரிக்கட்டுக்கெல்லாம் சிலவழிச்ச பணத்த உண்டியல்ல போட்டு வெச்சிருந்தாலும் நானும் இண்டைக்கு தம்பி ஆனந்தனைப்போல 'எஞ்ஜின்போட்' வாங்கி ஒரு மனிசனு வாழ்ந்திருக்கலாம். சுவீப் ரிக்கட் எடுத்தும், வெளிநாட்டுக்குப் போய் உழைச்சும்தான் ஒருவன் முன்னேறுவான் எண்டுற சுத்தப் பைத்தியகாரத்தனமான எண்ணம், நெஞ்சில தைரியமும், உழைப்பில நம்பிக்கையுமிருந்தா இஞ்சயும் அதாவது இந்த மண்ணிலயிருந்தே நல்ல முன்னுக்கு வரலாம் அதுக்கு தம்பி ஆனந்தனே நல்ல உதாரணம். இஞ்ச பாக்கியம், ஆண்டவனுணைப்படி எனக்கிட்ட இப்ப அஞ்சி சதத்துக்கும் வழியில்ல. எண்டாலும்என்ர பிள்ளைக்கு ஒண்டும் குடுக்காம சும்மா கையிலபுடிச்சிக் குடுக்கிறதுக்கும் எனக்கு மனமில்ல.அதால இருக்கிற வீடுவளவையும் எழுதிக் குடுத்து போடப்பட்ட நகைகளோட என்ர புள்ளையையும் நான் மருமகனுக்குக் குடுப்பன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேறெண்டையும் கேட்டு என்னத் தொல்லப் படுத்தாதீங்க'' என்று கதிராமர் சொல்லி முடித்த கையோடு வெற்றிலை வட்டாவை கை தாவினான்.

ஆனந்தன் எதுவும் பேசாமல் பின்னாலுள்ள முருங்கை மரத்தின் மறைவில் நின்று ஒட்டுக்கதை கேட்டுக் கொண்டு நின்ற சின்னவனைப்பார்த்தான் சின்னவனுக்கு அவன் மச்சாள் மாத்திரமே அப்போதைக்குப் போதும் போலிருந்தது. ''கெதியா விசயத்தை முடியுங்க!'' என்று சைகையால் ஆனந்தனுக்குச் சொன்னான். அவனைப்பார்க்க ஆனந்தனுக்குச் சிரிப்பு சிரிப்பாய் வந்தது. என்றாலும் அடக்கிக்கொண்டு கதிராமனைப் பார்த்தான்.

''என்னம்பி ஆனந்தன், நான் சொல்லுறது சரிதானே ஒண்டும் கதையாம இருக்கிறா! வாயத்துறந்து எதையாவது சொல்லன்'' என்று கதிராமன் சொன்னதும், ஆனந்தன் சொன்னான், ''நான் சொல்லுறதுக்கு என்னண இருக்கு இது பெரியவங்க பார்த்துச் செய்யிற விசயம் அம்மாதானே எல்லாத்தையும் கேட்டா! நீங்களும் உங்களால ஏண்டதச் சொல்லிப் போட்டிங்க! இனி ரெண்டு பகுதியாரும் சேந்து நடக்கிறதக் கவனிக்க வேண்டியது தானே!''

''தங்கப் பவுண்டா தம்பி உன்ர குணம்! நானும் இந்த 'ஓல்சிலோ'னெல்லாம் சுத்திப் பாத்து வந்திருக்கன் உன்னைப் போல ஒரு மரியாதையான பையனக் கண்டதேயில்ல!''

கதிராமன் தன் காரியம் கைகூடுவதற்காகவே இப்படியெல்லாம் பேசுகிறான் என்பது ஆனந்தனுக்குத் தெரிந்தாலும் ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து, ஒருத்தனின் கையில் பிடித்துக் கொடுக்கும் பொறுப்புள்ள ஒரு தந்தையாக கதிராமனை எண்ணிப் பார்த்தபோது அவன் மனம் கதிராமனுக்காக இரங்கியது. எத்தனையோ தாய் தந்தையர் கொஞ்சம்கூட தங்கள் பிள்ளைகள் மேல் பொறுப்பில்லாமல் தங்கள்தங்கள் பாட்டுக்கு வாழும்போது கதிராமன் எவ்வளவு குடித்தாலும்வெறித்தாலும் தன் மகளைக் கரை சேர்ப்பதற்காக இங்கே வந்து தன் இயலாமையைச் சொல்லி யழுவதை நினைத்து அவன்மேல் ஒரு மதிப்பை தனக்குள்ளேயே ஏற்படுத்திக் கொண்டான் ஆனந்தன்.

''என்ன பாக்கியம் பேசாம இருக்கிறா உங்க முடிவச் சொல்லுங்கவன். நீங்க எதச் சொன்னாலும் நான் செய்யிறன்!'' என்று கதிராமன் பாக்கியத்தின் முகத்தை ஆவலோடு பார்த்தான்.

அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது பாக்கியத்திற்கு ''சரி கதிராமன் வாற நல்ல நாள் பெருநாளில பாத்து கலத்தில சேர்த்துப் போட்டு விசயத்தை முடிப்பம். ஊருக்குச்சொல்லி பெரிய தடபுடலாக் கலியாணம் செய்யிறதுக்கு இது காலமில்ல. அதோட கையிலயும் வேணும். நாங்க றெடிதான். ஆனா உன்ர நிலமையையும் பார்க்கத் தானே வேணும் என்ன சொல்லுறா!''

''பாக்கியம் நீ சொல்லுற சரிதான் நமக்கு எப்படியோ விசயம் நல்லபடியா முடிஞ்சாச் சரி, அப்பநான் வாறன்'' கதிராமன் மனநிறைவோடு எழுந்து நடந்தான். அவன் தெருவாசலைத் தாண்டியிருக்க மாட்டான் சின்னவன் ஒரே துள்ளலில் அங்கே வந்து ஆனந்தனுக்குப் பக்கத்தில் இருந்து கொண்டான்.

''இனியென்ன சின்னவன் மாப்பிள்ளையாப் பொயித்தான் இனிமே நாம'போட்'வேலைக்கு வேறாளைப் பிடிக்க வேண்டியது தான்!'' என்று சிரித்தபடியே தாயைப்பார்த்துச் சொன்னான் ஆனந்தன். பாக்கியமும் அதைக்கேட்டு கொடுப்பிற்குள் சிரித்தாள் ''போங்கண்ணே உங்கட பகிடியும் நீங்களும் இவ்வளவு காலமும் நான் பொறுப்புத்தெரியாமத் திரிஞ்சித்தன். இனித்தானே பொஞ்சாதி, புள்ள, மாமன், மாமியெண்டு உழைக்க வேண்டியிருக்கு!'' என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்தால் மேலும் கிண்டல் பண்ணுவார்கள் என்ற எண்ணத்தில் சின்னவன் மீன்வாடிப்பக்கம் நடையைக்கட்டினான். அந்தளவில் பாக்கியமும் அங்கிருந்து செல்ல ஆனந்தன், பலத்த சிந்

## தொடர்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தனையோடு வலையில் சிக்கிப் போயிருந்த பெரிய தொரு கடல்தல்லிக் கல்லை எடுப்ப தற்கு முயன்று கொண்டிருந் தான். நேரம் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பெரும் பாடுபட்டு 'சல்லிக் கல்லை' எடுத்தெறிந்து விட்டு, ஆனந்தன் தனக்குள்ளே சிந் தித்தான்

கதிராமன் தன் கடமையை முடித்து விட்டான். சின்ன வன் நேற்றையவரை முஸ்பாத் திப் பேர்வழியாகத் திரிந்தவன் இன்று கலியாணம் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடை பெற்றதுமே ஏதோ மனைவி, மக் கள், மாமன், மாமி என்று பேசுகிறான் இப்படியே ஒவ் வொருவர் பாரங்களையும் மற் றவர்களின் தலைமேல் சுமத்தி வைத்துவிட்டுப் போகின்றமனி தர்கள் வாழ்கின்ற இந்த உல கத்தையும் அவர்களின் வாழ்க்கை முறைகளையும் எண் ணியபோது தனக்கு இருக் கின்ற பொறுப்புகளும், கட மைகளும் மெல்லமெல்லத் தலை களை நீட்டிப்பார்ப்பது போல அவனுக்குத் தோன்றியது.'எல் லாம் அவன் செயல்' என்றபடி நிமிர்ந்தான். அப்போது "வலை பின்னுபவர்களை சாப்பாட் டுக்கு அனுப்பவேண்டும் நேர மும் போய்விட்டது!" என்ற படி அங்கே பாக்கியம் வந்த தும், ஆனந்தன் "மெய்தான்" என்று சொல்லிக் கொண்டே திடுமென எழுந்தான்.

வலை பின்னியவர்களில் மாணிக்கத்தைத் தவிர எல் லோருமே போய்விட்டார்கள். மாணிக்கம் மாத்திரம் குட்டி போட்ட பூனையைப்போல அங் குமிங்கும் ஆனந்தனையே சுற்றி வளைத்துக்கொண்டு திரிந்தான் அதை அவதானித்த ஆனந்தன் "ஏதும் காசிகீசி கேட்கப்போகி றுரோ!" என்று எண்ணியபடி "என்ன மாணிக்கண்ண, சாப் பிடப் போகல்லையா?" என்று கேட்டான். "இல்லம்பி......... நான் உங்களோட தனியா ஒரு விசயம் கதைக்க வேணும்...... அதுதான்!" சட்டென ஆனந் தன் அவரை நெருங்கி "என்ன விசயம்!" என்றான்.

"தம்பி, நான் சொல்லப் போறதக் கேள்விப்பட்டு ஆத்தி ரப்படப்போடா! நானும் நீ ஊத்திற உப்பத்திண்டுறவன். எண்டதாலதான் மனம் பொறுக்காம இதச் சொல்லப் போறன் கோவிச்சி, சண்ட கிண்ட எழுப்புறதாயிருந்தா நீ என்னைக் கொண்டாலும் சொல்லமாட்டன். இது உன்ர தங்கச்சி சித்திராட விசயம்..." மாணிக்கம் விசயத்தைச் சொல் லாமல் நீட்டிக்கொண்டு போனது ஆனந்தனுக்குப் பிடிக்கவில்லை, "சொல்லுங்க வன் விசயத்த......!" என்று கத்தினான்.

—(தொடரும்)—

## சிறைச் சோலையிலே பூத்த சிறுமலர்கள் ......

பிரசவத்தின் போது ஏற்பட்ட வேதனைகளின் காரணமாக, ஒரு பெண் தன் கணவனையே பிறகு ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்து விடுவதில்லை. அதைப்போலத் தான் இலட்சியவாதிகளும் அடக்குமுறையின் கொடுமையில் சிக்குண்டு வெளிப்பட்ட பிறகும், தங்கள் இலட்சியத்தை நாடிச் செல்லுகிறார்கள்.

தள தளவென்றிருக்கிற வேப்ப மரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல் துலக்கி னால், அந்தக் குச்சி தன் மனக்கசப்பைக் காட்டிக்கொள்கிறது.

தமிழ் மொழியின் எதிர்காலம் திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றது. தமிழர்கள் கசப்பைக் காட்டிக் கொள்ளக்கூட உரிமையில்லையாம்.

வேம்பினும் தாழ்ந்தவனா தமிழன்? இலட்சியவாதி என்று கூறிக்கொள்பவன் தனக்குத்தானே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிக்கொள்ள வேண்டும்! அவன் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு அவன் மிகவிசுவாசமாக இருக்கிறானா? இதுதான் அந்தக்கேள்வி.

( கலைஞர் கருணாநிதியின் 'சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்களில்' இருந்து )

தொகுத்தது: செல்வி T. தங்கேஸ்வரி (சாந்தி) 305 1, அன்புவழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# விண்ணக வாழ்வின்

# ஓராண்டு நினைவு

## திரு. S. S. அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)


பிறப்பு: **14 - 09 - 1918** இறப்பு: **25 - 01 - 1986**

'மண்ணில் பயனுற வாழ்ந்து மறைந்தும்,
எம் மனதில் மறையாது வாழ்கின்ற
உமக்கு கண்ணீர்ப் பூக்களால்
அஞ்சலிக்கின்றோம். ஆண்டவன்
சந்நிதியில் ஆன்மா அமைதியுற
அவன் ஆசீர் இறைஞ்சுகிறோம்!

**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள்.**

---

# ஓராண்டு நினைவு



## செல்வன் மைக்கல் ஞானதாஸ்

மலர்வு: **1963 - 01 - 28** உதிர்வு: **1986 - 01 - 19**

நீ இளைய நிலா!
வளர்வாய்
வளம் பெருக்கிவாழ்வாய்
முழுநிலவாய்ப் பூத்து
இதயத்து வெம்மையெலாம்
இல்லாமல் போக
தண்ணொளி தருவாய்
தரணிக்கும் பலன்கொடுப்பாய்
என்று
எதிர்பார்த்தோம்.
அந்தநாள் ஏன் வந்தது?

முழுநிலவாகி
முழுமையடையாது
இளைய நிலாவே!
ஏன் தேய்ந்து போனாய்?
வானத்து நிலவில்
வாராத அதிசயம்
உன் வாழ்க்கையில் மட்டும்
ஏன் வந்தது?
ஆண்டொன்று கழிந்தும்
எம் நெஞ்சு துடிக்கின்றதே!
ஆறாத துயரில் வெடிக்கின்றதே

உன் தேடல் முடிந்தது
தேவன் சந்நிதியில்
நீ வாழ்க! - ஆனால்
நாங்கள் தேடுகிறோம்
தீராத சோகத்தோடு
தேடுகிறோம் — உன்னை
அன்பின் ஆழத்துள்
தேடுகிறோம்

தேடுவோர்: சகோதர சகோதரிகள், அம்மம்மா,
உறவினர்கள், நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கத்தோலிக்கத் திருச்சபை தேய்கிறதா?

## 2ம் வத்திக்கான் சங்க ஒளியில் ஒரு ஆய்வுரைக் கண்ணோட்டம்

புளியடிக்குடா, ஆனந்தா A. G. இராஜேந்திரம்

சின்னாட்களின் முன், கண்டி மறை மாவட்டப் பேராலயத்தில் ஞாயிறு திருப்பலியில் கலந்து கொண்டபோது, பலிசெலுத்திய இளங்குரு, திருவுரை வேளையிலே பலத்த குரலில் வேதனையாகக் கூறிய நிகழ்வுகள் - சமகாலச் சம்பவங்கள் இவை!

''சிறு காரணங்களை முன்வைத்தும், சிறு சிறு குடும்பப் பிரச்சனைகளை முன் வைத்தும், திருச்சபை அதிகாரிகளுடன் கொள்ளும் அற்பத் தகராறுகளை முன்வைத்தும் பலர் வேறு சமயங்களை நாடுகிறார்கள்; சிலரோ நல்ல பெயரும், புகழுங்கொண்ட கத்தோலிக்கப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டி நேரும்போது, திருமுழுக்குச் சான்றிதழ் ஒரு தேவையென வேண்டப்படுவதால், அதன் பொருட்டு மட்டும் பிள்ளைகளுக்குத் திருமுழுக்கு வழங்கிப் பெயரளவில் கத்தோலிக்கராக்குகிறார்களேயொழிய, அப்பிள்ளையையோ அந்நிய மதச் சூழலிலேயே நிழலாட விடுகின்றார்கள், வைத்துக் கொள்கிறார்கள்.''

இது, அதாவது, கத்தோலிக்கர் விசுவாசம் பிறழ்ந்து போவதென்பது இன்று எங்கும் காணக்கிடக்கின்றதொன்றாகிவிட்ட நிலை. நமது மறைவாட்டத்தில் கூட புதிது புதிதாக முளைக்கின்ற 'திருச்சபை'கள் சுலபமாகத் தம் வெளிநாட்டு மாதாந்தப் பராமரிப்பு நிதியைத் தேடிக்கொள்ள, கணக்கில் காட்டவேண்டிய 300 உறுப்பினர்களுள் ஏறத்தாழ 95% மானோரை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்தே திசை திருப்பியுள்ளன என்பது ஒரு தெளிவான உண்மை.

இதையிட்டு பிரசங்கக் கூட்டில் ஏறி அழுது பிரலாபிப்பதை விட, இது ஏன் சாத்தியமாகிறது என்று ஆராய்ந்து பார்த்து பெறும் முடிவுகளினடிப்படையில் செயல் திட்டம் வகுத்துக் கொண்டு செயல் படுவதே மேலானதாகும். அதைவிடுத்து மாற்றுத் திருச்சபைக்குப் போனது பற்றி வெகுண்டெழுந்து அப்படிப்பட்டவர்களுக்குக் கோயிற்கடமைகளை இரத்துச் செய்வது என்பது சுலபமான வேலை ஆனாலும் அது எதிர்பார்க்கின்ற விளைவைத் தரப்போவதுமில்லை.

கத்தோலிக்கத் திருச்சபை காலத்திற் கேற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு, தன்னை மக்களுக்கு மிக அருகில் இரண்டறக் கலக்கின்ற நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற அவாவுடன் வத்திக்கான் திருச்சங்க முடிவுகளை முன் வைத்திருக்கிறதென்பது யாவரும் அறிந்ததொன்று. ஆனாலும் தலத்திருச்சபைகள் உள்ளூர்த் திருச்சபைகள் - தாய்த் திருச்சபையின் இந்த முடிவுகளை எந்தளவிற்குச் செயற்பாட்டில் கொண்டுள்ளன. என்பது, ஒரு பெரிய கேள்விக் குறியுடனான விடயமாகவே இருக்கிறது. எத்தனையோ மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபைகள் கூட்டப்பட்டும், இது விடயத்தில் உரிய கவனமும், அக்கறையும் செலுத்தப்படவில்லை என்று துணிந்து கூறலாம்!

மாற்றான் தோட்டத்தை நம் முற்றத்துப் பறவைகள் நாடிச் செல்லும் அளவிற்கு அங்கு தென்படும் கவர்ச்சியென்ன? அதே சமயம் அக்கரைப் பச்சையை நாடிச் செல்லுமளவிற்கு எம்கரையில் குறைந்துவிட்ட பசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மை என்ன என்று ஆராய்வது தலத் திருச் சபைகளின் தலையாய பணியாக மாறவேண்டும்.

அடுத்தவன் முதுகை ஆராயமுன்னம் எமது முதுகை ஒருமுறை பார்த்துக்கொள்வதே சிறந்தது. ஆண்டாண்டு காலமாக ஒரு நிழலில் வாழ்ந்த மக்கள் வேற்று நிழலை நாட வேண்டிய நிலையில் முதலில் அவர்களது மனம் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் அதனால் அவர்களது விசுவாசம் ஆட்டம் கண்டிருக்கும். அவர்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாய் உணர்ந்திருக்கக் கூடும் இன்றைய உலகப் பிரச்சினைகளால் - குடும்ப, சமூக, சமுதாய, நாட்டுப் பிரச்சனைகளால் - அல்லற்படும் அவர்களது மன ஏக்கங்கள் தணிக்கப்படாதிருக்க வேண்டும் ஆறுதல் கிடைக்காமல் போயிருக்கக் கூடும். கிறிஸ்தவ மதிப்பீடுகள் அவர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்திருக்காமல் இருக்கலாம். நல்ல முன்மாதிரிகை கிட்டாமல் போயிருக்கலாம். தலைமைப் பீடம் மக்களோடு இணைந்ததாயிராமல் பழைய பாணியில்' தனித்து(வமாக) இருந்திருக்கக் கூடும். இதனால் உலக இடர்ப்பாடுகளை சந்திக்கும் வேளைகளில் அருகிருந்து தேற்றிப் பலமளித்துத் துணை செய்ய யாருமின்றிப் போயிருக்கலாம். வேண்டியது கிடைக்காமற் போயிருக்கக் கூடும். சதா அதையே திரும்பத்திரும்ப ... ... என்று மனித மனம் சலிப்படையத்தக்க விதத்தில் எமது ஆலய வழிபாடுகள், சடங்குகள் இருந்திருக்கவேண்டும். இவற்றை விட தலத்திருச் சபையை உருவாக்குவது தாங்களே என்ற எண்ணம் அவர்கள் மனதில் எழாமல் இருந்திருக்கலாம்.

மறு பக்கத்தைப் பொறுத்தவரையில் சுருக்கமாகச் சொல்லப் போனால், இக் குறைகளைப் போக்கும் வழிவகைகள், சம்பவங்கள், அம்சங்கள் இருக்க வேண்டும்!

அறு சுவை உண்டி வீட்டிலிருக்க யாரும் அதைத் தேடி கடை ஏறி இறங்கப்போவதில்லை! வித்தியாசமான தொன்றை நாடும் நிலை வந்தாலே இது நிகழும் இல்லையா?

சமாதானம் தேடும் மனமோ அதைக் கண்டு கொள்ளும் வரை கண்டு கொண்ட

மற்றவர்களின் மனதைக் கவர நீ எடுத்துக் கொள்ளும் முயற்சியின் அளவில், கால் பகுதி இறைவனின் இதயத்தைக் கவர நீ முயற்சி செய்தால் அது உனக்கு எவவளவோ நலமாக இருக்கும்.

சமாதானத்தைத் தனக்குரியதாக மாற்றி அமைத்து அந்த நிம்மதியை அனுபவிக்கும் வரை அலைபாயும், தேடும்! சமாதானம் தேடி அலைந்தவர் வரிசையில் முதன்மையானவர் கௌதம புத்தர். அவர் சமாதானம் கண்ட வழி இன்று ஆசியாவின் முக்கிய மதங்களுள் ஒன்றாகிவிட்டிருக்கிறது.

நம்மவர்கள் இன்று கத்தோலிக்கத் திருச்சபையைவிட்டு மாற்று மதம் நாடிச் செல்கிறார்கள் என்றால், உண்மையிலே அது ஒரு நல்ல அடையாளம் என்றுதான் நான் கூறுவேன். அதிர்ச்சியடைய வேண்டாம்; நிதானமாகச் சிந்தித்தால் நிதரிசனமான உண்மை புரியும்.

இன்றைய 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே, நாகரீகமும், கல்வி அறிவும், விஞ்ஞானமும் முன்னெப்போது இல்லாதளவுக்கு வளர்ந்து இருக்கின்ற நிலையிலே சமயத்தில் குறை கண்டு மனிதன் விலகிப் போகிறான்— அதுவும் பெரும்பாலான வேளைகளில்—மாற்று மதம் நாடுகிறான் என்றால், இவ்வளவு உலகாந்த மேன்மையிலும் உள அமைதியை, ஆத்மார்த்த சமாதானத்தை இறைவனின் நிழலிலேயே கண்டடையவே மனிதன் விரும்புகிறான் என்பதுதான் நான் சொல்லும் அந்த அடையாளம்.

அமைதி காணப் போதை வஸ்துக்களையும், மதுவையும், நஞ்சையும், ஆழ் குளங் குட்டைகளையும், இன்னேரென்ன தீச் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களையும் நாடுகின்ற ஒரு கால கட்டத்தில், மனிதன் ஆன்மீக வழிகாட்டுதலை நாடுகிறான் என்றால், இன்னும் மனிதனில் ஆன்மீகம்-ஆன்மா - சாகவில்லை என்பது நல்ல அடையாளம் ஆகாதா?

எனவேதான், காலம் இன்னும் கடந்து விடவில்லை தலத்திருச்சபையும் தனது உள்ளார்ந்த அக்கறைகளையெல்லாம் ஒன்று படுத்தி இதையிட்டுக் கொஞ்சம் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டும். நமது வேதம் - வாழ்க்கை நெறி - இன்றைய அன்றாட தொல்லைகளினின்றும், அவற்றின் மத்தியில் வாழ்ந்து கொண்டே சமாதானத்தையும், மன நிம்மதியையும் தருகின்றதொன்றாக இருக்கிறதா? இன்றைய காலகட்டத்தில் கிறீஸ்து இருந்தால் பரிதவிக்கும் இம்மக்களுக்கு ஆறுதல் தர என்ன செய்திருப்பார்? என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்க வேண்டும். அவர் புதிய புதிய போதனைகளைக் கொடுத்திருப்பாரா? அல்லது கொடுத்திருக்கும் போதனைகளை மனதில் நிலைக்க வைக்கப் புதுப்புது முறைகளை எடுத்துக் கூறியிருப்பாரா? புதிய போதனைகள் எதற்கு. அவர் சொல்லி வைத்தவைகளே யுகம் யுகமாக இப்பிரபஞ்சம் உள்ளவரை இறுதியொரு நாள்வரை போதுமானது! அவற்றின் அடிப்படையில் மனித மனம் இறையுணர்வை - மன அமைதியை இன்று அனுபவிக்கச் செய்வதுதான் இன்றுள்ள தேவையாகும்.

இங்கு குறிப்பிடத்தக்கதென்னவெனில், இஸ்ராயல் இனம் அடிமைத்தளையில் உழன்று, விடுதலை எதிர்பார்த்த காலகட்டத்தில் வந்த கிறிஸ்து, உரோமரை அடித்து விரட்டி சமாதானம் கொடுக்கவில்லை. மாறாக, அதே அடிமை நிலையில் சமாதானம் பெறும் வாழ்க்கையையே போதித்தார்; வாழ்ந்து காட்டினார்.

கத்தோலிக்கத் திருச்சபையானது, தனது வரலாற்றின் முற்பகுதியிலே தனது உறுப்பினர்களின் வாழ்ந்து காட்டுதலினால் - வாழ்க்கைச் சாட்சியத்தினால் செழிப்புற்றுத் திக்கெட்டும் பரவியது! ஆனால் நவீன கால வரலாற்றிலே இறை விசுவாசத்தைப் பரப்புவதில் திருச்சபை கைக் கொண்ட நடைமுறைகள் சில மக்களை மாக்களாகவே மாற்றிவிட்டது; திருச்சபையை ஒரு அட்சய பாத்திரமாக எண்ணி (எதற்கும், எப்போதும்) ஏறெடுத்து நோக்கப்படும் அமைப்பாகவே மாற்றிவிட்டது. இன்று வரை 75 சதவீதத்திற்கு அதிகமான பொதுமக்கள் திருச்சபை எனக்கென்ன செய்தது என்று கேட்கிறார்களேயொழிய, திருச்சபைக்கு நான் என்ன செய்தேன் என்று கேட்பவர்களாகக் காணோம். உலகளாவிய வாழ்வைப் பொறுத்தமட்டில் அவர்களது மனநிலை இதுவாகத்தான் இருக்கிறது. எனவே அவர்களது எதிர்பார்ப்பும் இதுவே. இவ்வெதிர்பார்ப்பு 'தக்கபடி' சந்திக்கப்படாத நிலையில் விசுவாசமே ஆட்டம் காணுகின்ற அளவுக்குக் கிறீஸ்தவ பெறுமானங்கள், நியமங்கள் அங்கு ஆழத்தை எட்டவில்லை.

இந்த நிலையில் தலத்திருச்சபை என்ன செய்யலாம் என ஆராய்வது மிகப் பொருத்தமானது. மக்கள் தாம் வேறு திருச்சபை வேறு என்று எண்ணாத நிலை ஏற்படும் படிக்கு, திருச்சபையின் பங்குதாரர்களாகப், பங்களிப்பவர்களாக மாறவேண்டும். இதற்கு அடிப்படையான வழி - ஒரு பங்குத் திருச்சபையானது தன்னைத்தானே பராமரித்துக் கொள்ளுகின்ற மனநிலையை ஏற்படுத்திக் கொடுப்பது. அப்பங்கின் குருவையும் அவர்களே பராமரிக்கின்ற உணர்வு வரச் செய்ய வேண்டும்! இதற்கு, அவர்களது பராமரிப்பில் வாழுகின்ற தியாக மனப்பான்மை குருக்களிடம் வரவேண்டும் கந்தையான மேலங்கி அணியவும், எளிமை உணவை உண்ணவும், சைக்கிள் மிதித்தோ, கால்நடையாயோ சென்று மக்கள் சேவையை ஆற்றவும் கூடிய தியாக மாதிரிகையைத் தரமுடியுமானால், தம் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளும் அந்த ஒருவர் வழியில் செல்லவும், அவரைப் பார்த்துப் பராமரிக்கவும் மக்கள் தயங்கவே மாட்டார்கள்.

இவ்வகையில், சிறு முயற்சியாகப் புளியடிக்குடாப் பங்கிலே இருக்கும் ஓரிரு நடைமுறையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். பங்குக் குரு மாதாந்தப் பங்குப் பராமரிப்புச் செலவை - கிடைத்த வரவை பங்கு அவை முன் வைக்கிறார். இது உண்மையில் ஒரு எழுச்சியை அதன் உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் நிலையை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பது நிச்சயம். இது நம்மை நாமே பராமரிக்கும் மனப்பாங்கை நமக்குத் தரும்; தரவேண்டும்! காலம் ஆகலாம். பல்லாண்டு காலமாக நம்மோடு ஊறிவிட்ட ஒன்றை நொடிப்பொழுதில் மாற்றிவிட முடியாது. நன்மைக்காகக் காத்து நிற்பதில் தவறேதுமில்லை. மேலும் இதே பங்கின் 'டச்பார்' பகுதியின் ஆலயத் திருத்த வேலைகளுக்கான மதிப்பீட்டையும் மக்கள் முன் வைத்திருக்கிறார். உண்மையான மக்கள் தமது ஆலயத்தைத் தாமே பராமரிக்க வேண்டாமா? இன்று பங்கின் ஆலயத்தைச் சீரமைக்கும் பணியில் பொது மக்கள் சிலர் முன்னின்று உழைப்பது தெளிவாகிறது. நமக்குரிய பணியை, நமக்காக வேறொருவர் எடுத்துக் கொள்வதால் நம் பொறுப்பு மெத்தனமாகிவிடுகிறது. நாமும் திருச்சபையில் ஆர்வமற்று விடுகிறோம் ஏனோதானோ நிலை உருவாகி விடுகிறது! நாமே நமக்காக உழைக்கும் போது, நமது பங்கை, ஆலயத்தைப் பராமரிக்கும் போது அது நமது சொந்தம் என்கிற உணர்வு வருகிறது. இந்நிலையில் நம்தோட்டத்து மல்லிகையை விட மாற்றான் தோட்டத்து மல்லிகையையா வாசம் என்போம்? இந்தப் பங்கில் (புனித வின்சட் டி போல் சபையின்) உணவுப் பார்சல் சேகரிக்கும் திட்டமும் நாளாக நாளாக மக்கள் வாழ்வில் ஒரு அம்சமாக மாறிவிட்ட நிலையைத் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கிறது. தமது வறியமக்களை அவர்களே ஒரு கணிசமான அளவுக்குப் பராமரிக்கிறார்கள் இல்லையா?

இப்படியான அடிப்படை மாற்றங்களை உருவாக்கும் ரீதியில் சிந்தித்துச் செயல்படுவதன் மூலம் தலத் திருச்சபையானது, தன் மக்கள் தம்மைத் தாமே பராமரிக்கும் திருச்சபையின் பங்காளிகளாக மாறவும், இதனால் புறக்கணிப்பு என்ற கேள்விக்கே இடமில்லா நிலை உருவாகவும், திருச்சபையின் நிழலே சொர்க்கம் என எண்ணும் பண்பை வளர்க்கவும் முயற்சி செய்ய வேண்டும். இது அவசியமானதுமாகும்.

ஆன்மீகத் துறையைப் பொறுத்தமட்டில், தலத்திருச்சபை தன்னைக் கொஞ்சம் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய தேவையை உணர முடிகிறது நம்மால் மக்கள் மனோவோட்டங்களை நாடி பிடித்துப்பார்த்து, அசற்கமை வான முறையிலும், நடைமுறைப் பிரச்சினைகளின் மத்தியிலே ஆன்மீகப் பலங்கொண்டு சமாதானத்தைக் கண்டடையக் கூடியதாகவும் உதவுதல் வேண்டும்.

இன்று இளைஞர் மத்தியில் கவர்ச்சியாகக் காணப்படும் (தமிழ்ப்) பண்பாட்டு வழிபாட்டு முறைகள் ஒரு பங்கிலாவது நடைமுறைப் படுத்தப்படுவதைக் காணோம். இதற்காகத் தாய்த்திருச்சபை எவ்வளவோ வலியுறுத்திக் கூறியும், இந்தியா போன்ற நாடுகளில் ஆராய்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு, வழிபாட்டு முறைகள் உருவாக்கப்பட்டு, அவை திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டும் நமது தலத்திருச்சபையில் இதற்கான அக்கறை கடுகளவேனுங் காணோம். மாதம் ஒரு முறையாவது ஞாயிறு பலிப்பூசையில் ஒன்றைப் பண்பாட்டு முறையில் நடத்தி வருவது பங்குகள் தோறும் செயற்படுத்தப்பட வேண்டியதொரு நடைமுறை. இதிலே தமிழர் பண்பாட்டிற்கொப்ப பாவாடைத் தாவணி, சாரி, வேட்டியுடுத்து, பெண்கள் தலையில் மலர்சூடி, சகலரும் பாதணிகள் அணியாமல் வழிபாட்டில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். இளைஞர் இயக்கங்கள், ஏனைய பக்திச் சபைகள் இது விடயத்தில் முழு ஒத்துழைப்பையும், முன் மாதிரிகையையும் வழங்குதல் வேண்டும். இவ்வாறு மக்களது பண்பாட்டுடன் இயைந்து சென்று, தமது என்ற உணர்வை இல்லற

---

நன்மை செய்வது எளிது மன்னிப்பது கூட எளிது. செய்த நன்மையையும், அளித்த மன்னிப்பையும் பிறருக்கு கூறுவது வாழ்வது மிகக் கடினம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாசிகள் பெறும்படி தலத்திருச்சபை முன் வரவேண்டும்.

இன்னும் பலன்மிக்க தியான முறைகளை மக்கள் மத்தியில் அறிமுகஞ் செய்து வைத்து, அதன் மூலம் இறை உணர்வை - சமாதானத்தை - தாம் வாழும் சூழலில் அனுபவிக்கும்படி தலத் திருச்சபை உதவவேண்டும்.

சமீப காலத்தில் எனது அலுவலக நண்பரது சகோதரி வாழ்வில் ஏற்பட்ட ஒரு அனுபவம், எனது இந்தக் கருத்தை வலுவூட்டி நின்றது அப்பெண்மணியின் குடும்ப வாழ்வில் ஏற்பட்ட தொல்லைகள் தற்கொலை செய்தால் என்ன என்று சிந்திக்குமளவுக்கு அவரைக் கொண்டு போயிருக்கிறது கடைசியில் பலரது வற்புறுத்தல்களின் பின் அவரது வீட்டிற்கண்மையிலுள்ள விகாராதிபதியிடம் போய் தனது குறைகளை எடுத்துச் சொல்லவே, அவரும் உடனடியாக ஆலோசனை, வழிமுறைகளை சொல்லித் தந்து வீட்டுக்கனுப்பிடவில்லை. மாறாக, பிரச்சனைக்கு அவளே தீர்மானம் காணவேண்டித் தியானம் (Meditatton) செய்யப் பழக்கி, மன அமைதி பெறச் செய்து அந்த நிலையில் அவரது பிரச்சினையையிட்டு அலசி முடிவெடுக்கத் தூண்டியிருக்கிறார் அந்தப் பிக்கு. இன்று அவர் தானே வகுத்த முடிவில் குடும்ப வாழ்வில் நிம்மதியாக வாழ்கிறார்.

"ஒரு மனிதனுக்கு ஒரு மீனைக் கொடு, அவனுக்கு ஒரு நாள் உணவையே கொடுக்கிறாய். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக்கொடு வாழ்நாள் பூரா உணவளிக்கிறாய்'' என்ற சீனப்பழமொழிக்கொப்ப, மனிதத்துவம் தழைக்கவும், மனித மாண்பு நிலைபெற்றிருக்கவும், சொந்தக் காலில் அவன் நிற்கவும் வேண்டிய ஆன்மீகப்பலத்தைப் பெறும் வழியை - புது முறைகளைக் காட்டிக் கொடுக்க வேண்டும். பழைமையான - அச்சடிக்கப்பட்ட - மந்திரம் ஓதும் முறைமைகளைச் சதா பேணிக்கொண்டிராது! (அதற்காக அவற்றை ஒரேயடியாகப் புறக்கணித்தல் என்றல்ல) இயல்பாக, மன அமைதியில் நின்று இறைவனோடு சுயமாகப் பேசுகின்ற அளவுக்கு இன்றைய விசுவாசிகள் வளர்க்கப்பட வேண்டும். இதனால், அக்கரைப் பச்சையை விட இக்கரை மேலான பசுமை கொண்டது என்பதை அவர்கள் உணர்ந்து (ஆன்ம) உணவுக்காக வீணே அங்குமிங்குமாய் அலைய மாட்டார்கள்.

எனவே, தலத்திருச்சபையானது பல கேள்விகளையும் தன்னகத்தே எழுப்பி, 2ம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியிலே, தன்னைப்பற்றி அறிந்து, தீர்க்கமான முடிவுகளை வகுத்து, விசுவாசி ஒருவன் மனித மாண்பில் நிலை பெற்று இறைவனை அனுபவிக்க வேண்டிய வழிகாட்டுதலையும் அருட்சாதனங்களையும் தந்து நிற்கவேண்டும். அவனை அவனாக வாழச் செய்யவும், திருச்சபையின் பங்காளனாக்கவும் வழிசெய்ய வேண்டும். இதனால் இரைதேடிப் புதுத் தோட்டம் நாடிய பறவைகளெல்லாம், காலாகாலத்திற்கும் நிழலும், பாதுகாப்பும் தரும் ஆலவிருட்சமாம் கத்தோலிக்கத் திருச்சபையை நாடி மீண்டும் வரச்செய்ய வேண்டும்.

துன்பத்தில் இன்பங்காண வேண்டும், சிலுவையில், மரணத்தில் மீட்பைக் கண்டவர் நாம். திருச்சபை தேய்கிறதென்றால் அதை வளர்ச்சியாக மாற்ற வேண்டாமா?



உறவின் மலர்வது உன் இதயத்தில் - ஆகவே, உன் இதயம் எப்பொழுதும் பண்பட்ட நிலமாக இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

**- ரெக்ஸ் -**

**கேள்வி:**

யேசு சிறுவனாக இருக்கும்போதே ஏரோது இறந்து விட்டான் என்று (மத்தேயு அதி 2:19-21) கூறப்படுகின்றது. அதேபோன்று லூக்காஸ் அதி 9:7-9 உள்ள பகுதியில் ஏரோது உயிரோடு இருந்து யேசுவின் நற்செயல்களைக் கேள்வியுற்று மனங்கலங்கினான் என்றுள்ளது. இங்கு அருளப்பரின் தலையை வெட்டியவர் உட்பட வேறொருவர் இருக்கின்றாரா? அல்லது ஏரோது இறந்தது வேதாகமத்தின்படி பொய்யா!

*செல்வி K. சகாயம்
பாலையூற்று, திருமலை.

**பதில்:**

ஏரோது என்பது ஒரு தனிநபரின் பெயர் மட்டுமல்ல அது ஒரு குடும்பப் பெயர் — ஒரு அரசவம்சத்தின் பெயர். அந்த வம்சத்தைச் சேர்ந்த சிற்றரசர்கள் கி. மு. 43ம் ஆண்டு முதல் கி. பி. 79ம் ஆண்டுவரை — அதாவது ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலமாக பலஸ்தீனாவின் பல பகுதிகளை உரோமைப் பேரரசின் தலைமைக்குட்பட்டு ஆண்டு வந்தனர். இவர்களுட் பெண்களும் அடங்குவர். உதாரணமாக ஏரோதியாள் (ஏரோது என்னும் பெயரின் பெண்பால்) சலோமி, பொணிக்கே என்பவர்கள்.

கொடுமை, சந்தேகம், அகங்காரம், படாடோபம், கொலைவெறி போன்ற வன்முறையும் அரக்க குணங்களும் கொண்ட ஆட்சியாளர்களை உற்பத்தி செய்த வம்சம் இவ்வேரோது வம்சம். அரியணையைக் கைப்பற்றவும் அதைப் பிடித்து வைத்திருக்கவும் எவரையேனும் காக்காய் பிடித்து எதுவாயினும் செய்து மனைவி மக்கள் கணவன், சகோதர சகோதரிகளுட்பட குடிமக்களையும், ஞானிகளையும், கொசுக்களைக் கொல்லும் மனப்பான்மையுடன் கொன்று குவித்த மனநோய் பிடித்த மன்னர்களை உள்ளடக்கியது. அர(க்க)ச வம்சம். இவ் வம்சத்தை சேர்ந்த ஐந்து ஏரோதுக்கள் புதிய ஏற்பாட்டின் காலகட்டத்தில் வாழ்ந்தனர்.

யேசுவின் பிறப்பின்போது அரசாண்டவன் பெரிய ஏரோது (மத்: 21-4) திருக்குடும்பம் எகிப்திலிருந்து திரும்பியபோது இருந்தவன் ஏரோது ஆர்கெலாவு (மத்: 2-22) அருளப்பரை கொலை செய்வித்தவன் ஏரோது அந்திப்பாஸ். யேசுவின் இறைபணியைக் கேள்வியுற்றுக் கலங்கியவனும் விசாரணையின் போது எள்ளிநகையாடினவனும் இவனே. (மாற்கு 6:14-16, லூக்காஸ் 9:7-9, 23:6-12) அப்போஸ்தலர் யாகப்பரை கொலை செய்வித்தவன் முதலாம் அகிரிப்பா ஏரோது என்பவன். (அப். பணி: 12:2) சின்னப்பரை விசாரித்தவன் இரண்டாம் அகிரிப்பா ஏரோது (அப். பணி? 25:13-14, 26:1)

★

**கேள்வி:**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் வழிகளையும் அவரின் வாக்குகளுக்கும், வாழ்வதுதான் உண்மைக் கிறிஸ்தவனுக்கு ஒப்பாகும் வானமும் பூமியும் அழிந்து போனாலும் என் வார்த்தைகளின் ஒரு சிற்றெழுத்துக்கூட அழிந்து போவதில்லை என கிறிஸ்து மொழிந்தார். ஆகவே நம் வழிபாட்டுத் தலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதுவும் திருப்பணி வேளையில் அதிகமான பெண்கள் மொக்காடுயிடுவது இல்லை இதைப்பற்றி குருவானவர்கள் பெரியோர்கள் மத்தியில் எடுத்துக்கூறி இயம்பியபோது, தற்கால நாகரீகம் வளர்ந்திருப்பதால் என்றும், நீங்கள் பெண்களை ஏன் பார்க்கிறீர்கள் என்று மழுப்பி விடுகிறார்கள். இருந்தும் இப்படியாக இறைவார்த்தைகளை உதாசீனம் பண்ணலாமா? அப்படியாயின் றேமன் கத்தோலிக்க சமயத்தாரைத் தவிர வேறு சமயத்தாருக்கு எப்படி இப்படியான செயல்களுக்கு இறை வார்த்தையோடு ஒப்பிட்டு விளக்கமளிப்பது ?

மார்க் ஜோர்ஜ்
தாளங்குடா-3.

பதில்:

இறைவார்த்தை என்னும் சொல் இறையியலில் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொடுக்கும் (முரண்படும் வகையில் அல்ல) "வேதாகமம் இறைவார்த்தை"; "வேதாகமத்தில் இறைவார்த்தை உண்டு"; "இறைமகன் யேசு இறைவனின் வார்த்தை" என்னும் பொழுதெல்லாம் கூற்றுக்குக்கூற்று 'இறைவார்த்தை' என்னும் சொல்லின் அர்த்தம் மாறுபடுவதையும், விரிவடைவதையும் காணலாம்.

இறைவார்த்தைகூட காலத்துக்குக் காலம் மலர்ந்து விரிந்து மாறியுள்ளதை பழைய புதிய ஏற்பாடுகளை ஒப்பிட்டு நோக்கும்போது புரியும் "கண்ணுக்குக் கண் பல்லுக்குப்பல்" என்றிருந்த இறைவார்த்தை, "உன் பகைவனையும் நேசி" என்று மாற்றமடையவில்லையா? **இறைவார்த்தை 'மனிதமொழி'யிலேயே எழுதப்பட்டுள்ளது என்பதை நாம் என்றுமே மறக்கலாகாது.** எழுதப்பட்ட எபிரேய கிரேக்க மொழிகளின் இலக்கிய — இலக்கண வரையறைகளுக்குப் பொருந்தும் விதமாகவே ஆன்மீக/இறையியற் கருத்துக்கள் வேதாகமத்தில் சொல்லுருவம் பெறுகின்றன.

வேதாகமத்தில் பல இடங்களில் பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவை எல்லாவற்றையும் நாம் ஒரே சம அந்தஸ்த்தில் வைத்து கணிக்கமுடியாது. உதாரணமாக "உன் பகைவனை நேசி" "என் ஊனை உண்டு உதிரத்தைப் பருகுபவன் நித்திய வாழ்வடைவான்" என்னும் இறைவார்த்தைகளை யேசு திருவாய் மலர்ந்தருளினார். அதே இறைமகன் யேசு "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது நல்லதல்ல" என்றும் சொன்னார். இம்மூன்று வசனங்களில் முதலிரண்டுக்குமுள்ள கனமும் கருத்தும் மூன்றாவதற்குண்டா? இறைமகன் வாயிலிருந்து உதிர்ந்தமை அனைத்தும் ஒருவகையில் இறைவார்த்தைதான். ஆயினும் எவற்றிலும் அதிமுக்கியமானவை, முக்கியமானவை, சாதாரணமானவை என்றும் பிரிக்கலாம். அவர் தெய்வீகக் கருத்துக்களை அன்றைய மனிதன் விளங்கிக்கொள்ளும் வகையில் வரையறைகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட மொழியிலேயே பேசினார். சாதாரண அன்றாட பாமரப் பொருட்களான வலை, மரம், அப்பம், கடுகு, வயல், வெளிப் பூ முதலியவற்றைக் கொண்டு அளப்பரிய இறையியற் சித்தாந்தங்களை அவர் விளக்கவில்லையா? அத்தகைய முறையிலேயே "இறைவார்த்தையின் ஒரு சிற்றெழுத்து என்னும் சொற்களுட் விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். சிற்றெழுத்து என்பது கிரேக்க அகரவரிசையின் மிகச்சிறிய எழுத்தான IOTA வைக் குறிக்கும். **அதாவது இறைவனின் கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதையே அது குறிக்கும்.**

பொதுவாகவும், மொத்தமாகவும் கூறுவதாயின் விவிலியத்தில் கூறப்படுபவை யாவற்றையும் நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பது உண்மையே. ஆயினும் சில விடயங்கள், ஒரு குறிப்பிட்ட இட — காலவரையறைகளுக்கே உரித்தானவை, பொருத்தமானவை அத்தகைய சூழலுக்கே உட்பட்டோருக்கே கூறப்பட்டவை. இவை வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளன என்னும் ஒரே ஒரு காரணத்திற்காக காலந்தோறும் எப்படியோ திணிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படவேண்டியவை என்று அடம்பிடிப்பது; அறிவுடமை அன்று விசுவாசமும் அன்று. வேதாகமத்தில் எழுதப்பட்டவை என்னும் காரணத்திற்காகவே பெண்கள் முக்காடிட வேண்டுமாயின் (1 கொரிந். 11: 1-6,); அதே காரணத்திற்காக அவர்கள் வழிபாடுகளின்போது பேசுவதற்கோ, செபிப்பதற்கோ அன்றேல் பாடுவதற்கோ வாயை திறக்கவும் கூடாதே. (1 கொரிந். 14 : 34-35)! அதே காரணத்திற்காகவே திருச்சபையின் அதிகாரிகளும், திருப்பணியாளர்களும் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இரண்டை ஒன்றுக்கு

நீயும் உன் மனைவியும் சேர்ந்து நான்கு கண்களால் உலகைப் பார்த்தும், நான்கு காதுகளால் செய்திகளைக் கேட்டும் இல்லறத்தை நடத்துங்கள் சிறப்படைவீர்கள். காதுகளையும் கண்களையும் பெருக்கிக் கொள்வதனால் மட்டும் வெற்றி பெற்றுவிட இயலாது. வாய்கள் இரண்டையும் ஒன்ருகக் குறைத்துக் கொள்வதிலேதான் வெற்றி அடங்கியிருக்கிறது.

செய்துகொள்ள வேண்டி நேரிடும். (*1 திமத்தேயு 3: 1-13*)!! விவிலியமே அனுமதிக்கிறது என்பதனால்தான் ஒரு கிறிஸ்தவக் கல்விமான்தான் மது அருந்துவதாக என்னிடம் கூறினார். அவர் காட்டிய மேற்கோள்: உபாகமம் 14;26. (இதை மிஞ்சிய இறையியலும் உண்டோ) !!!

புனித சின்னப்பர் "பெண்கள் முக்காடிட வேண்டும் — பெண்கள் பேசக்கூடாது" என்பதற்கு காரணமே அப்போஸ்தலர் காலத்திலும்கூட நாகரீகத்திலும், பண்பாட்டிலும், கல்வியிலும் வளர்ச்சியடைந்த பெண்கள் முக்காடிடுவதைத் தவிர்த்ததனுலும், ஆண்களைப் போலவே இறைவாக்குரைப்பதிலும் பரவசப் பேச்சுப் பேசுவதிலும் தேர்ந்தவர்களாகயிருந்ததினுலுமே என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. பண்டையச் சமூகத்திலும் கூட ஆணகளின் ஆக்கிரமிப்புகளையும் அடக்குமுறைகளையும் சிறுபான்மையான பெண்கள் எதிர்த்தே வந்துள்ளனர். கிறிஸ்தவம் யூதச் சமூகத்தில் பிறந்தாலும், உரோம — கிரேக்க சூழலுக்குள் காலடி எடுத்துவைத்தபோது இத்தகைய சிக்கல்கள் ஏற்படத்தான் செய்தன. யூதச் சமூகத்தில் ஆணின் ஆதிக்கம் மேலோங்கியிருந்ததினல் பெண்ணினம் அவர்களுக்கு அடங்கிக் கிடந்தது. (வேதாகமத்தில் பல இடங்களில் இந்நிலை பிரதிபலித்தாலும், இறைவனின் திட்டத்தில் ஆணுக்குப் பெண் சமமானவளே என்னும் கருத்தும் ஆங்காங்கு தொனிக்கவே செய்கிறது. கிரேக்க உரோம நாகரீக உலகில் பெண்களுக்கு கூடிய சுதந்திரமும் சலுகைகளும் இருந்தன. அவர்கள் சமூகத்தில் முக்காடிடவில்லை. எனவே வழிபாடுகளின் போதும் அணியவில்லை. யூதர்கள் இதையிட்டு இடறல் பட்டனர். சின்னப்பரும் ஒரு யூதன் தானே. அதுவும் பரிசேயராகயிருந்தவரல்லவா? எனவே தான் முதல் கொரிந்திய நிருபத்தின் *11ம், 14ம்* அதிகாரங்களில் அவர் அவ்வாறு எழுதியுள்ளார்


**சட்டங்கள் சம்பிரதாயங்களெல்லாம் அவை மனிதனின் வளர்ச்சிக்கு பயன் தரும் வரையில் தான்.** சட்டம் மனிதனுக்காகவே அன்றி மனிதன் சட்டத்திற்காக அல்ல: இது இறைமகன் யேசுவே எமக்கு கற்பித்த பாடம். இடையில் வந்த பழைய சட்டத்தில் பெண் ஆணின் அடிமையாகவும், ஆட்சிக்குட்பட்டவளாகவும் கணிக்கப்பட்டிருக்கலாம்; ஆனல் ஆதியில் இருந்தே படைப்பின் திட்டத்தின்படி — மீட்பின் திட்டத்தின்படி, ஆணும் பெண்ணும் வாழ்வின் சமபங்காளிகள் என்பதை இதே சின்னப்பரே மறுக்கவில்லை என்பதனுலேயே, கலாத்தியருக்கு எழுதிய மடலில் பின்வருமாறு எழுதுகிருர்: "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லோரும் கிறிஸ்துவை அணிந்துகொண்டீர்கள். இனி யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும் உரிமைக் குடிமகனென்றும், ஆண் என்றும் பெண் என்றுமில்லை கிறிஸ்து யேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" (*கலா: 3:27-28*)

இன்று பெண்கள் ஆலயத்தில் முக்காடு இடுவதில்லை என்பது நம் மத்தியில் பிரச்சினையாயிருக்கும் இதே காலகட்டத்தில், சில சகோதரக் கிறிஸ்தவ திருச்சபைகளில் பெண்களுக்குக் குருத்துவ திருப்பட்டமே வழங்கப்படுகிறதே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொங்குமா பொங்கல்?



பொங்கல் விழா தமிழ் மக்களின் தனிப்பெரும் விழாவாகும். புதுப்பானை வைத்து அதில் புத்தரிசி இட்டு, சக்கரையும், பாலும், பயறும் கலந்து அடுப்பில் வைத்து அது பொங்கி வழிகையில் 'பொங்கலோ பொங்கல்' என்று கூவிக்களித்து பொங்கல் கொண்டாடுவது மரபு.

நிலங்கொத்தி, விதை நட்டு, நீர் ஊற்றி, களை பிடுங்கி, கருத்தாய்க் கவனித்து, கடினமாய் உழைத்த உழைப்பின் பயனை, அறுவடையை, அது கிடைக்கக் கருணை செய்த இறைவனுக்கு — சுடும் வெயிலாலும், சூறைக் காற்றாலும், வெள்ளப் பெருக்காலும், அனைத்து அழிவுகளிலிருந்தும் காப்பாற்றிக்கொடுத்த அந்த மகா சக்திக்கு தன் உழைப்பின் பயனையே உவந்தளித்து நன்றி நல்கும் நாள் பொங்கல் விழா.

இந்த அறுவடை விழா, உலகில் பல நாடுகளிலும், பலவின மக்களாலும் கொண்டாடப்பட்டாலும் தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் இது தனித்தன்மை வாய்ந்தது.

பண்டையத் தமிழர் உழவுத் தொழிலையே, உயிர் கொடுக்கும் தொழிலாக — தலைசிறந்த தொழிலாகக் கொண்டனர்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்
றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்'

என்றும்

'உண்டி கொடுத்தார் உயிர்கொடுத்தாரே

என்றும்

கூறப்படும் வரிகள் இதை ஓரளவு விளக்கும்

எங்க ஏரோட்டம் நின்னுபோனா
உங்க காரோட்டம் என்னவாகும் ?

என்னும் இக்காலக் கவிஞனின் கேள்வியும் இதை விளக்குவது தானே!

இவ்வாறு உழவுத் தொழிலை உயிரோம்பும் தொழிலாகக் கொண்டாடிய தமிழ் மக்கள் அதன் பயனைப் படைத்து நன்றி கூறி பொங்கலிட்டு கூத்தாடுவது பொருத்தமானது!

காலட்போக்கில் ஆங்கிலேயரின் காலனித்துவ ஆதிக்கத்தின் பின் உழவுத்தொழிலின் பெருமை ஓரளவு குன்றத்தொடங்கி உத்தியோகம் பார்ப்பதே உயர்ந்த தொழில் என்றும், கல்லாதாரும், எளியோரும் செய்யத் தகுத்ததே உழவுத் தொழில் என்னும் கருத்து வளர்ந்தது. அதுமட்டுமன்று நிலப்பிரபித்துவ - முதலாளித்துவ அமைப்பில் உழவன் நிலமற்றவனாக — சுரண்டப்படுபவனாக, சொந்த உழைப்பின் பயனை நுகரமுடியாதவனாக இருந்தான். உழவனின் வியர்வை நெல்லுக்கு உரமாக, விளைகின்ற பொருட்கள் முதலாளியின் வீட்டுக்கு உடமையாகின. இதனால் சமூக மதிப்பில் உழவன் வீழ்ந்தான். பொங்கல் விழாவின் சிறப்பும் வீழ்ந்தது

காலனித்துவ வீழ்ச்சிக்குப்பின் ஏற்பட்ட சுதந்திர மறுமலர்ச்சியால் உழவுத்தொழில் ஏற்றம் பெற்றது! ஆனால் உழவன் ஏற்றம் பெற்றானா என்பது கேள்விக்குரியது. ஆயினும் உழவனின் பெருமையைக் காட்டும் பொங்கல் விழா மீண்டும் பொலிவு பெற்றது. தமிழ் நாட்டில் — அறிஞர் அண்ணாத்துரை தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கிய விழிப்புணர்வும், தமிழ் எழுச்சியும் இதற்கு குறிப்பிடத்தக்க ஒரு காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழ்நாட்டில் எழுந்து பரவிய இத்தமிழ் எழுச்சி அலை இலங்கையில் தமிழினத்தின் போராட்ட உணர்வுகளுக்கும் ஓர் உந்துசக்தி யாக இருந்தது என்பதும் அரசியல் விமர்சகர் களின் கருத்தாகும்.

எப்படியோ இந்நாட்டில் இன்று தமிழி னம் பொங்கிக்கொண்டிருக்கிறது. தமிழனது விளைநிலங்கள் கவனிப்பாரற்றுக் தரிசாகிக் கிடக்கின்றன. ஏர் பிடிக்கும் உழவனையும் போராடும் புலியென்று துப்பாக்கிகள் குறி பார்ப்பதால் உழவுமில்லை. விளைவுமில்லை. இந் நிலையில் பொங்கலேது! இல்லாதபோது பொங் குவது எது? வீட்டில் இருக்கமுடியாமல், வீதி யால் நடக்க முடியாமல், உழுதுண்டு வாழ முடியாமல், வீட்டில் பெண்களை மானத்தோடு வாழவைக்க முடியாமல் தமிழினம் பதறித் துடிக்கும் இந்நிலையில் பாலேது! அது பொங்கி வழிவதுதான் எவ்வாறு.

ஆனாலும் தமிழினம் பொங்கியே ஆக வேண்டும், பொங்குவது பால் மட்டுமன்று.

வீரம் பொங்கட்டும் — சத்திய
வேட்கை பொங்கட்டும்
மானம் பொங்கட்டும் — மதி
வன்மை பொங்கட்டும்
விடுதலை பொங்கட்டும் — வீரர்க்குள்
ஒற்றுமை பொங்கட்டும்
நம்பிக்கை பொங்கட்டும் — நலிவிலும்
பொறுமை பொங்கட்டும்.

பால் பொங்கல் படைக்குமுன்
மனப் பொங்கல் படைப்போம்

'பொங்கலோ பொங்கல்'

மலர்வேந்தன்.

# வாசக நேயர்களே!

'தொண்டன்' உங்கள் சஞ்சிகை, இதை வளரவைப்பது உங்கள் பொறுப்பு.

அச்சுத்தாள் — அச்சுக்கூலி அனைத் தும் உயர்ந்துகொண்டிருக்கும் போதும் தொண்டன் விலையை உயர்த்தாது சுமை களை நாமே சுமந்துகொண்டு உங்கள் கைகளில் இதழை விரியவைக்கின்றோம்.

ஆயினும் கடந்த மூன்றாண்டுகளில் தொண்டனின் வளர்ச்சி எண்ணிக்கை அடிப்படையில் தேக்க நிலையிலேயே உள்ளது.

ஆயிரம் பிரதிகளைக் கடந்து ஓட முடியவில்லை — மூச்சு இளைக்கிறது. உதவ முன்வாருங்கள்!

★ குறைந்தது குடும்பத்துக்கு ஒரு பிரதி யாவது வாங்கிப்படியுங்கள்!

★ அயலவர்க்கும், நண்பர்க்கும் அறி முகம் செய்யுங்கள்!

★ ஆண்டுக்கு 35/- அனுப்பி சந்தா தாரராகச் சேருங்கள்.

★ அன்பர்களே! உங்கள் அன்பளிப்பு களை எமக்கு அன்புகூர்ந்து அனுப் புங்கள்.

★ எழுத்தாளர்களே! உங்கள் ஆக்கங் களால் இதழை அலங்கரியுங்கள்.

★ வர்த்தகரே! உங்கள் விளம்பரங்க ளால் இதழை வளப்படுத்துங்கள்.

★ ஆர்வலரே! ஆலோசனைகளால் இதழை சிறக்கவையுங்கள்.

தொண்டன் உங்கள் பிள்ளை — அவன் படரத்துடிக்கும் முல்லை.
தொடர்பு :


"ஆசிரியர் - தொண்டன்"
சமூகத் தொடர்புகள் நிலையம்
ஆயரகம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 37

(கொரிந்தியருக்கெழுதிய இரண்டாவது திருமடல்)



பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**30-1-87**

முழுப்பெயர்: ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

## இடமிருந்து வலம்

2 உள்ளத்துக்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ளது

5 கொரிந்துநகர் வாழ் மக்களிடையே இதனைத் திரட்ட புனித சின்னப்பர் திட்டம் போட்டார். ஆனால் அது குழம்பி விட்டது

7 பிறர் போற்றக்கூடிய நிலை

8 இதன் உதவியால் புனித சின்னப்பர் தப்பிப் பிழைத்தார்.

9 நன்கொடையைப் பெற்றவரின் உள்ளத்தில் மலர்வது

10 சின்னப்பர் கொரிந்து மக்களுக்கு ஆற்றியது மாறி நிற்கின்றது.

12 இறைவனிடமிருந்து கிடைக்கும் கொடை

13 மோயீசன் கூட இதனை மூடிக் கொண்டார்.

14 இரவுக்கு முடிவு பகல். பகலுக்கு முடிவு?

15 பாம்பின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டு சீர் குலைந்தவள் அப்படியே இருக்கின்றாள்.

16 பிறரைப்பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லித்திரிதல்.

## மேலிருந்து கீழ்

1 கிறிஸ்து அனைவருக்காகவும் தம்மை அர்ப்பணித்ததன் காரணம்

2 இறைவனால் படைக்கப்பட்டதற்கு முடிவேயில்லை.

3 கொரிந்து திருச்சபையை இதே நிலையில் கிறிஸ்துவுக்கு முன் நிறுத்த புனித சின்னப்பர் ஆர்வம் கொண்டார்

4 தான் யாருக்கும் இப்படியாய் இருக்கவில்லை என புனித சின்னப்பர் கூறுகின்றார்

—(மறுபக்கம் பார்க்கவும்)—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

6 இக்கடிதங்கள் கொரிந்துநகர் திருச்சபையே என புனித சின்னப்பர் உறுதியாகக் கூறுகின்றார்.

7 நாம் அடைந்துள்ள இவ்வுலக வாழ்வு இந்த உடைக்குச் சமம் என்கிறார் புனித சின்னப்பர்

8 தற்காலிகமாக அமைக்கும் இவ்விடம்

9 தீமைக்கு எதிரானது.

11 தமஸ்கு நகரில் இருந்து புனித சின்னப்பர் தப்பிச் சென்ற வழி

13 புனித சின்னப்பருக்கு ஏற்பட்ட சோதனை இதனைப்போல் அவரை வருத்தியதாம்.

**போட்டியாளர் கவனத்துக்கு!**

தொண்டனில் பிரசுரமாகும் விவிலியக்குறுக்கெழுத்துப்போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பப்பட்டால் மட்டுமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். வேறு வகையில் வரைந்து அனுப்பப்படும் படிவங்கள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது என்பதை போட்டியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

— நிர்வாகம் —

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 35 முடிவுகள்

## இடமிருந்து வலம்

1. பால்
2. இறைவாக்கு
5. இசை
6. இரக்கம்
8. ஆடு
10 ருபம்விப் (விருப்பம்)
11. பெரியவ (ன்)
12. விண்ணோர்

## மேலிருந்து கீழ்

1. பாறை
2. இசைக்கருவி
3. வானம்
4. குறைபாடு
5. இரத்தம்
7. கன்னிப்பெண்
8. ஆசிரியர்
9. விருந்து

## பரிசு பெறுவோர்:

*1ம் பரிசு:*

அந்தோனிப்பிள்ளை இக்னேசியஸ் (றூபன்)
சொறிக்கல்முனை, சம்மாந்துறை.

*2ம் பரிசு:*

திருமதி அனன்சியா பெனடிற்
'றோசகம்' ஆலய வீதி, மூதூர் - 3.

## பாராட்டுப் பெறுவோர்:

அருள் சகோதரர் S. அலோசியஸ்
சகோதரர் இல்லம், கல்முனை.

A. உதயகுமார் கொறேயிரா
மலரகம், மூதூர் - 3.

P. தேவராஜா,
31/4, லேடி மெனிங் ட்ரைவ்,
மட்டக்களப்பு.

பொன்ராஜா ஜெயராணி,
163/1, திருமலை வீதி
மட்டக்களப்பு:

எ. றோஸ்லீமா கூஞ்ஞ,
2ம் வட்டாரம்
வங்காலை.

போட்டியில் பங்கு பற்றியோர்: 78
சரியான விடை அளித்தோர்: 60

— அனைவருக்கும் எமது நன்றி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உங்கள் பக்கம்

## கவிதைக்கும் கதைக்கும்

கார்த்திகைத் தொண்டனில் வெளிவந்த 'கல்லறைகளே உங்கள் கதவுகளைக் கொஞ்சம் திறந்து வையுங்கள்' என்ற கவிதைக்கும் 'புதிய திருப்பம்' என்ற சிறுகதைக்கும் எனது இதயங்கனிந்த பாராட்டுகள்.

வே. மகேந்திரன்
மத்துகம

## பொருத்தமான கட்டுரை

'சமாதானம் பிறக்குமா' என்ற கட்டுரை இக்காலத்துக்கு மிகவும் பொருத்தமானது. இதைத்தந்த A. G. இராஜேந்திரம் அவர்களுக்கு நன்றி.

மா. ஜோர்ஜ்
தாழங்குடா

## வேதனை அடைந்தேன்

'கடல் கடந்த நாடுகளில் தமிழ் மொழி' என்னும் ஆராச்சிக் கட்டுரையைக் கண்ணுற்றேன். தமிழர்களே தமிழ் மொழியை மறந்துள்ளார்கள் என்பதை அறிய வேதனையாக உள்ளது. நாம் அறியாததை தொகுத்தளித்தவர்களுக்கு நன்றி.

செல்வி. அ. ஸ்ரெலா பாரதி
அம்பாறை

## துணிச்சலான தொண்டன்

ஐப்பசித்திங்கள் இதழில் இயேசுக்கிறீஸ்து பற்றி ரோம் பேரரசர் சீசருக்கு வரையப்பட்ட மடலை தமிழில் தந்த A. G இராஜேந்திரம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி!

யேசுக்கிறிஸ்து இன்று நமக்கு யார்? என்ற கட்டுரை புரட்சிப் பாதையாகத் திகழ்கிறது கல்முனைக் கலவரம் குறித்து உண்மைத் தகவல்களை தந்துள்ள தொண்டனின் துணிச்சலைப் பாராட்டுகிறோம்.

ஆர். எஸ். செல்வரெத்தினம்
(வானொலி அபிமானிகள் மன்ற விமர்சன குழாம் சார்பாக)
அல்வாய்.

## ஆழமாக அறிந்தேன்

'அன்பை வளர்க்கும் ஒரு சமாதானப் புறா' தொடர் கட்டுரை மூலம் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரைப் பற்றி ஆழமாகத் தெரிந்துகொண்டேன்.

அ. றேஹறான் பேணட்
திருகோணமலை.

எப்படி நீ வாழ்ந்தாய் என்பது முக்கியம்தான். ஆனால், அதைவிட முக்கியமானது இப்போது எப்படி நீ வாழ்ந்துகொண்டிருக்கிறாய் என்பதாகும்.

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்து வரும்

நாள்: 17, 18, 19 - 01 - 87 நேரம்: காலை 5-50 மணி

கத்தோலிக்க நற்சிந்தனை

நாள்: 20 - 01 - 87 நேரம்: மாலை 6 45 மணி

சிறுவர் உலகம்

நாள்: 25 - 01 - 87 நேரம்: மாலை 7-00 மணி

புதிய உலகம்

★ கௌரவம் என்தோழி - நாடகம்

31 - 1 - 87
நாள்: 1 - 2 - 87 நேரம்: காலை 5-50 மணி

கத்தோலிக்க நற்சிந்தனை

நாள்: 3 - 2 - 87 நேரம்: மாலை 6-45 மணி

சிறுவர் உலகம்

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 10 - 01 - 1987ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media